அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 32 | ஜனவரி 2024 | திருவள்ளுவர் ஆண்டு 2055



## கர்மா!

## நரகத்தில் இலங்கைத்தீவு

## மாற்றம் வருமா?

## நிகழ்நிலை காப்புச் சட்டமும் ஆபத்துகளும்

முல்லை பாஸ்கர்



# தர்மா!

சொட்டு சொட்டாய்
விழுகின்ற
துளி நீரை
சுருக்கென்று
விழுங்கிக் கொள்ளும்
சுடு மணலாய்.

மண்ணுக்குள்
உறங்கிக் கொண்டிருக்கும்
விதைகளை
எழுப்பிடவே..
பொதுநலமாய்..
இயற்கையாய்..
நான் இருக்க..
நீ மட்டும்
சுயநலமாய்

ஏன்
குறிஞ்சியை
குவாரி ஆக்கினாய்?
முல்லையை
காங்கிரிட் ஆக்கினாய்?
மருதத்தை
நெகிழியால் நிரப்பினாய்?
நெய்தலில்
கழிவுகளை கலக்கினாய்?
பாலையும் கடத்தினாய்?

அரசன்
அன்று கொல்வான்
தெய்வம் நின்று கொல்லும்.

மனிதர்களால்
ஐவகை நிலங்களும்
மாண்டு விட்டன!
நம்மை
பழி தீர்க்கவே
பயணிக்கத்
தொடங்கி விட்டன!

இனி!
ஒன்றும் செய்ய இயலாது.
மண்டியிடுவோம்
இயற்கை முன்
காத்திருக்கலாம் நாம்.
நம் மீது
கருணை கொள்ளுமா என்று..

மாத இதழ் | மணம்: 32
ஜனவரி
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

## உள்ளடக்கம்...


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து... | 05 |
| நரகத்தில்... | 06 |
| நிகழ்நிலை... | 10 |
| அரசியல் யுக்தியா?... | 13 |
| ஈழத் தமிழர்.... | 15 |
| 50 வது... | 18 |
| ஈழத் தமிழருக்கு.... | 21 |
| சாதனைப் பெண்ணே [கவிதை]... | 23 |
| தாய்மொழி தமிழும்... | 24 |
| விடுதலை ஒன்றே... | 25 |
| எம்.ஜி.ஆர்.... | 28 |
| மலரன்னை... | 30 |
| யாழில் மாட்டு... | 32 |
| ஹைக்கூ கவிதைகள்.... | 34 |
| புத்தரின் மனைவி... | 35 |
| தேனீ... | 36 |
| மனிதம்... | 39 |
| தாய்... | 40 |
| வலை [தொடர் கதை]... | 43 |




## திருக்குறள்

**குறள் 210:**

“அருங்கேடன் என்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின்”

**விளக்க உரை:**

ஒருவன் தவறான நெறியில் சென்று தீயசெயல் செய்யாதிருப்பான் என்றால் அவன் கேடு இல்லாதவன் என்று அறியலாம்.






# அக்கறை உறவுகள்

வரவர எழுநிலம் மெருகேறிக்கொண்டு வருவது சிறப்பு. வழமைபோல அட்டைப்படம் அருமை.

நிறைய விஷயங்களைத் தருகிறீர்கள். ஆனால், சில கட்டுரைகள் மிகவும் நீளமாக இருப்பதால் வாசிக்க கடினமாக உள்ளது.

கொஞ்சம் சிறிதாக கட்டுரைகளைப் போட்டால் இந்தக் குறையும் தீர்ந்துவிடும். கவனிப்பீர்களா?

**-சசிகரன் மகாதேவன்**
**லண்டன்.**

'நான் பெண்' கவிதை மனதைத் தொட்டது. என்ன! பெண்களால் நடத்தப்படும் பத்திரிகை என்றுவிட்டு பெண்கள் பற்றிய ஆக்கங்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் மிகக் குறைவாகவே போடுகிறீர்கள்? இது மனவருத்தத்திற்கு உரிய விஷயம்.

கூடுதலாக அரசியல் சம்பந்தப்பட்ட விஷயங்கள் வருகின்றன. தப்பில்லை. ஆனால், அரசியலுக்குத்தான் நிறைய பத்திரிகைகள் வருகின்றனவே.

இந்தப் பத்திரிகை பெண்களை முன்னிலைப்படுத்தி வந்தால் மேலும் சிறப்பாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயம்.

**-சாந்தினி மகேந்திரன்**
**ஜேர்மனி.**

ஜனாதிபதி தேர்தலில் யார் வென்றாலும் தமிழர்க்கு தீர்வு கிடைக்கப் போவதில்லை என்பது நிச்சயம்.

உலகமெல்லாம் பரந்திருக்கும் எம்மவர்கள் வெறுமனே கூடிக்கூடிக் கதைப்பதிலும் அறிக்கைகள் விடுவதிலும் மட்டுமே காலத்தைக் கடத்தப் போகிறார்களா? தயவு செய்து புலம்பெயர் தேசத்து தமிழர்களுக்கு சுரணை வரக்கூடியவாறு ஏதாவது எழுதுங்களேன்.

எல்லோருமே எனக்கென்ன என்று இருந்தால் முடிவென்ன?

**-அமுதன் செங்குட்டுவன்**
**மொன்றியல், கனடா.**

இலங்கையின் கோமாளி அரசியல் பற்றி வாசித்து வாசித்து சலித்துவிட்டது. வேறே தாவது எழுதுங்களேன். பண்டாரவன்னியன் பற்றிய பதிவு அருமை.

முல்லையின் கவிதைகள் எப்போதும் அர்த்தம் பொதிந்தவையாக இருக்கும். அவ்வாறே 'இலட்சியம்' கவிதையும் சிறப்பாக இருந்தது.

**-தமிழினி திவாகர்**
**பெல்ஜியம்.**

ஆசிரியர் தலையங்கத்தில் சரியாகச் சொல்லியிருக்கிறீர்கள்.எங்கள் மக்களில் ஒரு பகுதியினரே சதிவலைக்குள் சிக்கி எங்களை அழிக்கும் கருவியாகச் செயற்படுவது வேதனை.

படித்தவர்கள், படிக்காதவர்கள் என்ற பாகுபாடில்லாமல் போதைவஸ்தில் சிக்கி சமூகத்தையே சீரழிப்பவர்கள் ஒருபுறம்.

திரும்பவும் அதிகாரத்தை எங்கள் கையில் எடுத்தால்தான் நாட்டை மறுசீரமைக்கலாம் என்று தோன்றுகிறது.

**-நோயல் பெனடிக்ற்**
**ஃபுளோரிடா, அமெரிக்கா.**

எங்களுடைய பெரிய மேய்ச்சல் நிலத்திற்காக எம்மவர்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள்.

எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் எங்கே போனார்கள்? எங்கள் பக்கத்து பிரச்சனைகளை கூடுதலாக பிரசுரியுங்கள்.

இலங்கை அரசு சம்பந்தப்பட்ட கட்டுரைகள் யாரையும் கவரப் போவதில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம்.

**-மணிவண்ணன்.**
**தாயகம்.**

'வலை' நெடுந்தொடர் அட்டகாசமாகப் போகிறது.

உண்மையைச் சொன்னால் அதற்காகத் தான் நான் எழுநிலம் வாசிப்பதே. இடையிடை குட்டிக் கதைகள் வருவதும் சிறப்பு. கட்டுரைகளின் எண்ணிக்கை கூடிவிட்டது. பாதிக்குமேல் எங்களுக்கு சம்பந்தமில்லாத கட்டுரைகள்.

கவிதைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவு என்றுதான் சொல்ல வேண்டும்.

**-நிரஞ்சனி முருகதாசன்**
**பிரான்ஸ்**




ஐங்கரன் விக்கினேஸ்வரா நல்ல விடயங்களை தேடித் தேடி பதிவிடுகிறார். பத்திரிகையில் தொடர்ந்து சிங்கள இனவெறியர்களின் படத்தைப் பார்க்க கடுப்பாகிறது. எங்களுக்காக உயிரைக் கொடுத்தவர்களைப் பற்றி எழுதுங்கள். அவர்கள்தான் இந்தப் பத்திரிகைக்கு தகுதியானவர்கள். தமிழர்களின் பிரச்சனைகள், அவற்றிற்கான தீர்வுகள், தமிழ்ப் பகுதிகளில் நடைபெறும் வேலைத்திட்டங்கள் பற்றியும் எழுதலாமே.

**-பிரியன் சிறிதரன்**
**சிட்னி, அவுஸ்திரேலியா.**




எழுநிலம் சஞ்சிகையின் கடந்த
மின்னிதழ்களை நூலகம் ஆவணகத்தின்
இணையத்தளத்தில்
இதழ்கள் பிரீவில் பார்வையிடலாம்...
https://www.noolaham.org

ஆசிரியர் பக்கம்

# மாற்றம் வருமா?

**தமிழர்களின்** அரசியல் வரலாற்றில், 74 ஆண்டுகால பாரம்பரியம் மிக்கதும், இருக்கும் அத்தனை தமிழ்க் கட்சிகளில் பெரியதுமான தமிழரசுக் கட்சி தனக்கென ஒரு புதிய தலைவரைத் தெரிந்தெடுத்துள்ளதுடன் புது வருடம் ஆரம்பித்துள்ளது.இந்த 74 கால வரலாற்றில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவினரால் ஏகமனதாகத் தேர்தெடுக்கப்படுபவர் தலைமையேற்றதுதான் வழமையாக இருந்து வந்துள்ள நிலையில், முதல்முறையாக ஜனநாயக ரீதியில் தேர்தல் நடத்தப்பட்டு தலைமை தெரிவுசெய்யப்பட்டது என்பது ஒரு புதிய முறைமைதான்.

கடந்த பதினான்கு வருடங்களாகவே இதே தலைமைமைப் பதவிக்கு தம்மைத் தயார்படுத்தி, அதற்கெனவே திட்டமிட்டு காய் நகர்த்திக் கொண்டிருந்தவர் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன்.இவருக்கும், பாராளுமன்றில் தமிழ்த் தேசியத்திற்காக காரசாரமாக குரல் கொடுக்கும் சிறிதரன் அவர்களுக்கும் இடையில் தலைமைக்கான தேர்தலில் கடும் போட்டி நிலவியது.

சுமந்திரன் ஆங்கில மொழிப்புலமை உள்ளவர். சட்டம் படித்தவர். பல நாடுகளுக்கு சென்று ராஜதந்திர பேச்சுகளில் கலந்து கொண்டவர். பன்னாட்டு தூதுவர்களுடன் தொடர்புகளைப் பேணி வருபவர்.கொழும்பை மையப்படுத்திய அரசியல் செய்துவருபவர். மாறாக, சிறிதரன் இந்த விடயங்களில் சற்று பின்தங்கிய நிலையில்தான் உள்ளார். ஆனால், அவர் வடக்கு, கிழக்கை பிரதிபலிப்பவர். அவரது கோட்டையாக கிளிநொச்சி உள்ளது. தாயகத்தில் நின்று செய்யும் அரசியல் அவருடையது.இதனால் பலரும் சுமந்திரன் அவர்களின் வெற்றி உறுதி என்ற மிதப்பில் இருந்த வேளையில், அதனைப் பொய்யாக்கி தேர்தலில் தலைமையைத் தக்க வைத்துக் கொண்டார் சிறிதரன்.

பாரம்பரியமிக்க தமிழரசுக் கட்சியின் பெயரில்தான் 'தமிழ் அரசு' இருக்கின்றதே ஒழிய, தமிழர்க்கான அரசு அமைக்கும் எந்தவொரு செயற்பாட்டிலும் இந்தக் கட்சி ஈடுபட்டதில்லை. தேர்தல் காலத்தில் செயற்படும் கட்சியாக மட்டுமே இயங்கி வந்தது அக்கட்சியின் அடிப்படைத் தோல்வி. தமிழரசுக் கட்சி ஒரு சிலரைக் கொண்ட ஒரு குழுவின் கட்டுப்பாட்டில் இதுவரை காலமும் இயங்கி வந்ததும், தலைமைகள் கொழும்பில் தங்கி கொழும்பு சார் அரசியல் செய்ததும் மக்கள் இக் கட்சியில் பெருமளவில் நம்பிக்கை வைக்க முடியாமல் இருந்ததற்கு ஒரு முக்கிய காரணம்.

எங்களிடத்தில் தங்கியிருந்து எங்களுக்கு சேவை செய்வதை விடுத்து, எதிரிக்கு துணையாக வேலை செய்வது என்பது மக்களை முடிவெடுக்க வைக்கும். தமிழ்த் தேசியம் பேசும் சிறிதரனின் வெற்றிக்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். மக்கள் இன்னமும் தமிழ்த் தேசியத்தின் பால் ஆர்வமாக இருக்கிறார்கள் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

தலைமைக்கான தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட பின்னர் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில், 'நான் என்னுடைய முழுமையான ஒத்துழைப்பை சிறிதரனுக்கு வழங்கி செயற்படுவேன்' என்ற சுமந்திரனின் கூற்று,இன்னமும் கட்சிக்குள் தான் பலம் பொருந்திய நிலையில் இருப்பதை வெளிக்கூறுவதாகவே எண்ணத் தோன்றுகிறது. அப்படியாயின், சிறிதரனின் தலைமைத்துவ வேலை இலகுவாக இருக்கப் போவதில்லை. அவரின் புதிய தலைமைமீது சுமந்திரன் பாரதூரமான செல்வாக்குச் செலுத்தவும் கூடும்.

தனித்துவமான ஒரு தலைவராக கட்சியை வழிநடத்த வேண்டுமென்றால் சிறிதரன் போராட வேண்டியிருக்கும். அதிலும், இதுவரை காலமும் தேர்தலுக்காக மட்டுமே இயங்குபவர்களாக மாறிப் போயிருந்த பலதரப்பட்டவர்களையும் கொண்டிழுப்பது கஷ்டமான காரியம்தான். திட்டமிட்டு, தனக்கான பாதையை திறம்பட வகுத்து,அதன் வழி சென்று வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு சிறிதரனுக்கு உண்டு.

சுமந்திரனும் கட்சியில் இருக்கும் வேறு பலரும் சட்ட நுணுக்கங்கள் தெரிந்தவர்களாக இருக்கலாம். மொழிப் புலமை மிக்கவர்களாக இருக்கலாம். சிறிதரன் இவற்றில் பின்தங்கிவிட்டார் என்று எண்ணவும் கூடும்.

ஒரு தலைமை என்பது அத்தனை அறிவுசார் விடயங்களையும் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. கற்றோரையும், அந்தந்தத் துறைகளில் புலமை மிக்கோரையும் தம்மோடு சேர்த்து அவர்களின் உதவியுடன் நிர்வாகத்தை திறம்பட நடத்தும் தலைமைத்துவ ஆளுமை கொண்டவராக இருக்க வேண்டியதுதான் ஒரு தலைமைக்கான பண்பு. ஒரு தனிநபரில் தங்கியிருக்க வேண்டிய தேவையில்லை. வரும் காலத்தில், சிறிதரன் சுமந்திரனின் உதவியை நாடும்போது,சுமந்திரனே கட்சியின் முக்கிய ஆளாக மாற, சிறிதரன் பெயருக்கு மட்டுமே தலைவராக இருக்கும் நிலை தோன்றவும் வாய்ப்புண்டு. மாறாக, ஒரு ஆளுமை மிக்க தலைவராக,புத்திஜீவிகளின் உதவியுடன் கட்சியிலும் மக்களிடத்திலும் மாற்றத்தை கொண்டுவர முடியும். அந்த சந்தர்ப்பத்தில் சுமந்திரனுக்கும் சிறிதரனுக்கும் பிளவு ஏற்படவும் வாய்ப்புள்ளது.

இதில் எந்த வழியை சிறிதரன் தேர்ந்தெடுக்கப் போகிறார்? எடுப்பார் கைப் பிள்ளையாக இல்லாமல் ஒரு தனித்துவமிக்க தலைமையை சிறிதரன் கொடுப்பாரா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



# நரகத்தில் இலங்கைத்தீவு



மக்கள் கிளர்ச்சிக்கு வழிவகுத்த பொருளாதார நெருக்கடியின்போது, கடுமையான பொருட்கள் தட்டுப்பாட்டுக்கும் மக்களை இரவுபகலாக எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் மைல் கணக்கில் வரிசைகளில் காத்துநிற்கவைத்த எரிபொருட்கள் தட்டுப்பாட்டுக்கும் மக்கள் முகம் கொடுத்தனர். கடந்த வருடம் பெரும்பாலான மக்களினால் வாங்கமுடியாத விலைகளில் இருந்தாலும் பொருட்களைப் பெறக்கூடியதாக இருந்த காலப்பகுதியை

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று அதன் ஆசிரிய தலையங்கத்தில் 'நரகத்தில் இடைவேளை' (Interval in the Hell) என்று வர்ணித்திருந்தது.

தற்போது புதுவருடம் பிறந்த நிலையில் வரி அதிகரிப்புகளின் விளைவாக பொருட்களின் விலைகளும் சேவைகளின் கட்டணங்களும் மக்களினால் தாக்குப் பிடிக்கமுடியாத அளவுக்கு உயர்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கும்போது அந்த வர்ணனை எவ்வளவு கச்சிதமானது என்பதைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

பெறுமதிசேர் வரியை (VAT) அரசாங்கம் 15 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக அதிகரித்ததுடன் ஏற்கெனவே விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்த பெருவாரியான பொருட்களும் அந்த வரிவிதிப்பு வீச்சுக்குள் கொண்டுவரப்பட்டதை அடுத்து (ஏற்கெனவே, வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பதற்கு பல்வேறு சிக்கன உபாயங்களை கடைப்பிடித்து வந்த) பெரும்பாலான மக்கள் என்ன செய்வது என்று தெரியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள்.

செலவினங்களைக் குறைத்து அரச வருவாயை அதிகரிப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் விதித்திருக்கும் நிபந்தனைகளை அரசாங்கம் மக்களுக்கு நேரக்கூடிய இடர்பாடுகளைப்



பற்றி சிந்திக்காமல் நடைமுறைப்படுத்துவதே இதற்குக் காரணமாகும்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியைத் தொடர்ந்து பெறுவதற்கு அதன் நிபந்தனைகளை நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. பிச்சைக்காரர்களுக்குத் தெரிவு இல்லை. இந்த வருடம் தேர்தல் ஆண்டாக இருந்தாலும் கூட முன்னரைப் போன்று அரசியல் கட்சிகளிடம் இருந்து இனிப்பான பொருளாதார நிவாரண உறுதிமொழிகளைப் பெரிதாக எதிர்பார்க்கவும் முடியாது. ஏனென்றால், முக்கியமான எதிரணி கட்சிகளும் கூட ஆட்சிக்கு வந்தால் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒத்துழைத்துச் செயற்படப் போவதாகவே கூறுகின்றன.

நிபந்தனைகள் குறித்து நாணய நிதியத்துடன் மீள் பேச்சுவார்த்தைகளை நடத்தப்போவதாக அந்த கட்சிகள் கூறினாலும் அது எந்தளவுக்கு சாத்தியமாகும் என்ற கேள்வி இருக்கிறது.

எதிர்காலத்தில் பதவிக்கு வரக்கூடிய எந்த அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியத்துடனான உதவித் திட்டத்தை மீள்பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தமுடியும். ஆனால், சர்வதேச ஆதரவைப் பெறுவதற்கு தற்போது முன்னெடுக்கப்படும் பாதையையே தொடர்ந்து பின்பற்ற வேண்டியிருக்கும் என்று சில தினங்களுக்கு முன்னர் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க செய்தியாளர்கள் மகாநாட்டில் கூறினார்.

தற்போது தெரிவு செய்யப்பட்டிருக்கும் பாதையில் இருந்து விலகினால் சர்வதேச ஆதரவு கிடைக்காமல் போகும். சர்வதேச நாணய நிதியத்தின் உதவித்திட்டம் கடந்த வருடம் செப்டெம்பர் முதலாம் திகதி தொடங்கியது. கடனுதவியின் முதலாவது தவணைக் கொடுப்பனவு வழங்கப்பட்ட பிறகு அடுத்த

> குறைந்த வருமானம் காரணமாக போதுமான உணவுப் பொருட்களைப் பெற முடியாததால் முகங்கொடுக்க வேண்டியிருக்கின்ற சவால்களை சமாளிக்க பல குடும்பங்கள் உணவைக் குறைத்திருப்பது மாத்திரமல்ல, வழக்கமாக சாப்பிடுகின்ற உணவு வகைகளைக் கைவிட்டு மலிவான வேறு வகை உணவுகளை நாடியிருப்பதாக சில சிவில் சமூக அமைப்புக்கள் மேற்கொண்ட ஆய்வுகள் கூறுகின்றன.

தவணைக் கொடுப்பனவுக்கு முன்னதாக எமது கடப்பாடுகள் குறித்து மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இது அடுத்த நான்கு வருடங்களுக்கு எந்த அரசாங்கம் பதவியில் இருந்தாலும், காலப் பொருத்தமான முறையில் கொள்கைகளில் மாற்றத்தைச் செய்வதற்கு மீண்டும் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தவேண்டிய ஒரு தொடர்ச்சியான செயன்முறையாகும்.

பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லை. ஆனால், சர்வதேச ஆதரவைப் பெறுவதற்கு இதே திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டியது அவசியம். அந்த விளக்கப்பாட்டின் அடிப்படையில்தான் வெளிநாடுகளின் அரசாங்கங்களும் ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களும் கடன் நிவாரணத்துக்கு இணங்கியிருக்கின்றன. இதே கடன் மறுசீரமைப்பு பாதையில் அடுத்த பத்து வருடங்களுக்கு பயணம் செய்யவேண்டிய தேவை இருக்கிறது.

இதில் மாற்றத்தைச் செய்தால் அவர்களும் கடன் நிவாரணம் தொடர்பான தீர்மானத்தை மாற்றிவிடலாம். அதனால் தற்போதைய பாதையில் இருந்து விலகினால் தங்களால் தொடர்ந்து ஆதரவை வழங்க முடியாது என்று அவர்களால் கூறமுடியும். அதற்கு பிறகு வருடாந்தம் நாம் 600 கோடி அமெரிக்க டொலர்கள் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும் என்று அவர் கூறினார்.

இலங்கை அகப்பட்டிருக்கும் சிக்கலின் பாரதூரத் தன்மையை கலாநிதி வீரசிங்கவின் விளக்கம் தெளிவாக உணர்த்துகிறது.

புதிய வருடத்தில் கடுமையான இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வருடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் கூறியிருந்தார். பொருளாதார நிலைவரம் தொடர்பில் மக்களுக்கு பொய் கூற விரும்பவில்லை என்றும் மக்களால் விரும்பப்படாத தீர்மானங்களை எடுப்பதற்கு தயங்கப்போதில்லை என்றும் கூறுவதன் மூலமாக அவர் தன்னை ஒளிவு மறைவற்ற தலைவராக காட்டிக்கொள்ளலாம்.

ஆனால், வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்கு முன்னெடுக்கப்படும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் விளைவான சுமையை சாதாரண மக்களினால் எவ்வளவு காலத்துக்கு தாங்கிக் கொள்ள முடியும்? அந்த சுமை சமுதாயத்தின் சகல பிரிவுகள் மீதும் ஒப்புரவான ஒரு முறையில் பகிரப்படுவதாகவும் இல்லை. மறைமுகமான வரிகளின் விளைவான சுமை சாதாரண மக்களையே கடுமையாக அழுத்துகிறது.

## நிலவர அறிக்கை:

இத்தகைய பின்புலத்தில், குடிசன மதிப்பு, புள்ளி விபரவியல் திணைக்களம் கடந்த வாரம் வெளியிட்ட அறிக்கையை நோக்குவது அவசியமானதாகும். நாட்டின் தற்போதைய



நிலைவரம் மாத்திரமல்ல எதிர்கால நிலைவரமும் கூட இருள் கவிழ்ந்ததாகவே இருக்கப் போகிறது என்பதை அறிக்கை தெளிவாகப் புரிந்து கொள்ள வைக்கிறது.

கடந்த வருடத்தின் முதல் காலாண்டில் 4.70 சதவீதமாக இருந்த வேலையில்லாத் திண்டாட்டம், இரண்டாவது காலாண்டில் 5.20 சதவீதமாக அதிகரித்தது. இன்று ஒரு குடும்பத்தின் அடிப்படை மாதாந்த வேதனம் 40 ஆயிரம் ரூபாவுக்கும் 50 ஆயிரம் ரூபாவுக்கும் இடைப்பட்டதாக இருக்கிறது.

அது வெறுமனே உணவுத் தேவைக்கு மாத்திரமே போதுமானது. பிள்ளைகளின் கல்வி, உடை, மருத்துவ பராமரிப்பு, பயணங்கள் மற்றும் பொழுதுபோக்கு செலவினங்களுக்கு மேலதிகமாக பணம் தேவை.

தாய், தந்தையையும் இரு பிள்ளைகளையும் கொண்ட ஒரு குடும்பத்தின் உணவுச் செலவுக்கு சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா தேவைப்படுகிறது.

60.5 சதவீதமான குடும்பங்களின் மாதாந்த சராசரி வருமானம் கடுமையாகக் குறைந்து விட்டது. அதே வேளை, 91 சதவீதமான குடும்பங்களின் மாதாந்த செலவின மட்டம் கடுமையாக உயர்ந்துவிட்டது. பொருளாதார நெருக்கடியின் காரணமாக 22 சதவீதமான குடும்பங்கள் வங்கிகளிடம் அல்லது தனியாரிடம் கடன் வாங்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டன.

75.2 சதவீதமான குடும்பங்களின் உணவு முறையில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. 97.2 சதவீதமான குடும்பங்கள் செலவினங்களைச் சமாளிக்க பல்வேறு உபாயங்களைக் கடைப்பிடிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. அதேவேளை 46.4 சதவீதமான குடும்பங்கள் சேமிப்பைக் குறைத்திருக்கின்றன அல்லது சேமிப்புக்களை அன்றாட தேவைக்கு செலவு செய்கின்றன.

2019ஆம் ஆண்டுக்கு பிறகு வறியவர்களின் தொகை சுமார் 40 இலட்சத்தில் இருந்து 70 இலட்சமாக அதிகரித்திருக்கிறது. சனத்தொகையில் 31 சதவீதத்தினர் வறுமைக்கோட்டின் கீழ் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கொழும்பில் இயங்கும் 'லேர்ண் ஏசியா' என்ற சிந்தனைக் குழாம் கடந்த வருடம் மேற்கொண்ட ஆய்வொன்றின் மூலம் சனத்தொகையில் மூன்றில் ஒரு பிரிவினர் அல்லது 33 சதவீதமானோர் தினம் ஒருவேளை உணவைத் தவிர்ப்பதாகவும் 47 சதவீதமானவர்கள் உணவின் அளவுகளைக் குறைத்திருக்கும் அதேவேளை வயது வந்தவர்களில் 27 சதவீதமானவர்கள் பிள்ளைகளுக்குத் தேவை என்பதற்காக தங்களது உணவை கணிசமாகக் கட்டுப்படுத்திக் கொள்வதாகவும் கண்டறியப்பட்டிருக்கிறது.

குறைந்த வருமானம் காரணமாக போதுமான உணவுப் பொருட்களைப் பெற முடியாததால் முகங்கொடுக்க வேண்டியிருக்கின்ற சவால்களை சமாளிக்க பல குடும்பங்கள் உணவைக் குறைத்திருப்பது மாத்திரமல்ல, வழக்கமாக சாப்பிடுகின்ற உணவு வகைகளைக் கைவிட்டு மலிவான வேறு வகை உணவுகளை நாடியிருப்பதாக சில சிவில் சமூக அமைப்புக்கள் மேற்கொண்ட ஆய்வுகள் கூறுகின்றன.

வழமையான உணவு வகைகளை வாங்குவது கட்டுப்படியாகாது என்பதால் குடும்பங்கள் கிரமமான உணவுளைத் தவிர்ப்பதாகவும் தங்களது அடுத்த வேளை உணவு எங்கிருந்து வரும் என்பது தெரியாத நிலையில் சிறுவர்கள் வெறுவயிற்றுடன் படுக்கைக்கு செல்கிறார்கள் என்றும் யுனிசெவ் அமைப்பின் தெற்காசிய பிராந்தியப் பணிப்பாளர் ஜோர்ஜ் லாறியீ அட்ஜே 2022 ஆகஸ்டில் அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

சிறுவர்கள் மத்தியிலான மந்தபோசாக்கைப் பொறுத்தவரை தெற்காசியாவில் ஆப்கானிஸ்தானுக்கு அடுத்ததாக இலங்கை இரண்டாவது இடத்தில் இருக்கிறது என்றும் அறிக்கைகள் கூறின.

இது இவ்வாறிருக்க, இவ்வருடத்தின் முதல் காலாண்டின் இறுதியில் மக்களின் வாழ்க்கைச் செலவுச் சுமையில் 75 சதவீதம் குறைவடையக் கூடியதாக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ கடந்த வாரம் கூறியிருக்கிறார்.

அரசியல்வாதிகள் உறுதிமொழிகளை அளிப்பார்கள். பிறகு அவற்றை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டால் அதற்கும் காரணங்களை தயாராகவே வைத்திருப்பார்கள். வாழ்க்கைச் செலவுச் சுமையில் 75 சதவீதக் குறைப்பு எந்தளவுக்கு சாத்தியமாகும் என்பது முக்கியமான கேள்வி.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியில்லாமல் அரசாங்கத்தினால் எதையும் செய்யமுடியாமல் இருக்கலாம். ஆனால், அதனால் விதிக்கப்படுகின்ற நிபந்தனைகளை நிறைவேற்றுகின்றபோது அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் கடுமுனைப்பான நடவடிக்கைகள் சமூக அமைதியின்மையை தோற்றுவிக்கக் கூடியவை.

அறகலயவைப் போன்ற மக்கள் கிளர்ச்சி மீண்டும் மூளுவதற்கு சாத்தியம் இல்லை என்று அரசாங்கம் மெத்தனமாக நினைக்கிறது போலும். அவ்வாறு மூண்டாலும் கூட படைபலம் கொண்டு ஆரம்பத்திலேயே அடக்கிவிடலாம் என்று அதற்கு நம்பிக்கை இருக்கக்கூடும்.

சர்வதேச நாணய நிதியத்தின் இறுக்கமான கடனுதவி நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தியதன் விளைவாக ஆர்ஜன்டீனா போன்ற நாடுகளில் மூண்ட அரசியல் - சமூக எழுச்சி

அறகலயவைப் போன்ற மக்கள் கிளர்ச்சி மீண்டும் மூளுவதற்கு சாத்தியம் இல்லை என்று அரசாங்கம் மெத்தனமாக நினைக்கிறது போலும். அவ்வாறு மூண்டாலும் கூட படைபலம் கொண்டு ஆரம்பத்திலேயே அடக்கிவிடலாம் என்று அதற்கு நம்பிக்கை இருக்கக்கூடும்.



களில் இருந்து எமது அரசாங்கம் மாத்திரமல்ல நாணய நிதியமும் பாடத்தைப் படிக்க வேண்டும். லத்தீன் அமெரிக்க, மத்திய கிழக்கு, வட ஆபிரிக்க பிராந்திய நாடுகளிலும் அத்தகைய எழுச்சிகள் ஏற்பட்டன. எமது பிராந்திய நாடான பாகிஸ்தானும் அதே பிரச்சினையை எதிர் நோக்குகிறது.

### மனித உரிமை மீறல்கள்:

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகள் அசமத்துவத்தை அதிகரித்து அமைதியின்மையை தூண்டுவதாக பல சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் கடுமையான விமர்சனங்களை முன் வைத்திருக்கின்றன.

'சிக்கன நடவடிக்கைகள்' என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் அத்தியாவசிய பொதுச்சேவைகள் மீதான அரசாங்கத்தின் செலவினக் குறைப்பும் பிற்போக்கான பெருமளவு வரி விதிப்புகளும் மனித உரிமைகளை மலினப்படுத்தியிருக்கின்றன என்பதற்கு வரலாற்றில் தாராளமான சான்றுகள் இருக்கின்றன.

வறுமையையும் அசமத்துவத்தையும் மேலும் தீவிரப்படுத்துவதற்கும் மனித உரிமைகள் மலினப்படுத்தப் படுவதற்கும் வழிவகுக்கும் கொள்கைகளை சர்வதேச நாணய நிதியம் நாடுகள் மீது திணிக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் சொந்த உள்ளக ஆய்வுகளே அதன் கொள்கைகள் நாடுகளின் கடன்களைக் குறைப்பதில் பொதுவில் பயனுறுதியுடைய விளைவுகளை ஏற்படுத்தவில்லை என்பதைப் புலப்படுத்துகின்றன.

2023 ஏப்ரலில் வெளியிடப்பட்ட நிதியத்தின் 'உலகப் பொருளாதார நோக்கு' என்ற அறிக்கையில் 'சிக்கனத் திட்டங்கள் கடன் விகிதங்களை ஒரு சராசரி அடிப்படையில் குறைக்கவில்லை' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு (Human Rights Watch) ,'சர்வதேச நாணய நிதியம் சிக்கன கடன் நிபந்தனைகளினால் உரிமைகள் மலினப்படுத்தப்படும் ஆபத்து - அதிகரிக்கும் அசமத்துவம் குறைபாடுடைய நிவாரண முயற்சிகளும்' என்ற தலைப்பில் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருக்கிறது.

"சிக்கன நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது அரசாங்கங்களும் நிதி நிறுவனங்களும் மனித உரிமைகள் மீதான தாக்கம் குறித்து மதிப்பீட்டைச் செய்யவேண்டும் என்று வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு வழிகாட்டல் கோட்பாடுகள் கூறுகின்றன. ஆனால், சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளும் நிபந்தனைகளும் அந்தக் கோட்பாடுகளுக்கு இசைவானவையாக இல்லை என்பதை அனுபவங்கள் உணர்த்துகின்றன."

சிக்கன நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது அரசாங்கங்களும் நிதி நிறுவனங்களும் மனித உரிமைகள் மீதான தாக்கம் குறித்து மதிப்பீட்டைச் செய்யவேண்டும் என்று வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு வழிகாட்டல் கோட்பாடுகள் கூறுகின்றன. ஆனால், சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளும் நிபந்தனைகளும் அந்தக் கோட்பாடுகளுக்கு இசைவானவையாக இல்லை என்பதை அனுபவங்கள் உணர்த்துகின்றன.

### ஐ.எம்.எவ். கலகங்கள்:

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன்களைப் பெற்ற ஏனைய நாடுகளின் அனுபவங்களில் இருந்து இலங்கை அரசாங்கம் படிப்பனைகளைப் பெற்று நிதானமாக நடந்துகொள்ளக் கூடிய வாய்ப்பு இருப்பதாக தெரியவில்லை.

அந்த நாடுகளில் மக்கள் மத்தியில் தோன்றிய அமைதியின்மையை 'சர்வதேச நாணய நிதியக் கலகங்கள்' (IMF Riots) என்றே அழைக்கப்படுகின்றன. இலங்கையும் அத்தகைய கலகம் ஒன்றைக் காணுமா இல்லையா என்பது அடுத்து வரும் நாட்களில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளிலேயே முற்றிலும் தங்கியிருக்கிறது.




வ.சக்திவேல்

# நிகழ்நிலை காப்புச் சட்டமும் ஆபத்துகளும்

முன்மொழியப்பட்டுள்ள நிகழ்நிலை பாதுகாப்புச் சட்ட மூலம் முன்வரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் இரவோடு இரவாக சட்டமூலங்களை உருவாக்கி நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் ஒத்துழைப்போடு சட்டமாக்குவதும், அதன் பின்னர் நாட்டில் வாழும் மக்களின் உரிமைகளையும், இந் நாட்டினுடைய ஜனநாயக விழுமியங்களையும் அடியோடு வேரறுக்கின்றதுமான செயல்பாடுகள் காலங்காலமாக அரங்கேற்றப்பட்டுக் கொண்டே வருகின்றன.



இதற்கு எடுத்துக்காட்டாக தற்போது முன்மொழியப்பட்டுள்ள நிகழ்நிலைப் பாதுகாப்பு தடைச்சட்டத்தைக் கூறலாம். இவ்வாறான சட்டம் இந்நாட்டில் வாழும் சிவில் சமூகங்களைக் குறிவைப்பதோடு அவர்களின் அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் ஆகியவற்றை இல்லாது செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றமை அறிந்த யதார்த்தமாகும்.

அந்த வகையில் தற்போது வரைபு செய்யப்பட்டுள்ள நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமானது நடைமுறைக்கு வருமானால் எதிர்காலத்தில் குடிமக்கள் சுதந்திரமாகத் தகவல்களைப் பெறுவதற்கும் அணுகுவதற்கும் கையாள்வதற்கும் கருத்துகளை வெளிப்படுத்துவதற்கும் பாரியதொரு அச்சுறுத்தலாக இருக்கும்.

## நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் என்றால் என்ன?

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் 2023 செப்டெம்பர் 18 ஆம் திகதி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 2023 ஒக்டோபர் 3 ஆம் திகதி இலங்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இச்சட்ட மூலமானது குறிப்பிட்ட நோக்கங்களுடன் 'நிகழ்நிலை பாதுகாப்பு ஆணைக்குழு' ஒன்றை நிறுவ வேண்டும் என்று கூறுகிறது.

இந்த நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தின்படி ஒரு நபர் நிகழ்நிலையில் பதிவிடுவதை அல்லது பகிர்வதை குற்ற



மாக்க முடிவதுடன், இது 20 ஆண்டுகள் வரை தண்டனைத் தடைகளை விதிக்கும்.

### இந்தச் சட்டமூலத்தால் குடிமக்கள் நேரடியாக எதிர்கொள்ளவுள்ள சவால்கள்:

நியாயமற்ற, தன்னிச்சையான அல்லது தற்காலிகமான முறையில் செயல்படுத்தக்கூடிய அதிகப்படியான மற்றும் தெளிவற்ற குற்றங்களை இந்த சட்டமூலம் உருவாக்குகிறது.

ஒப்புதலுக்கு உட்பட்டு தன்னிச்சையான அடிப்படையில் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நீக்கக்கூடிய ஜனாதிபதியால் நேரடியாக நியமிக்கப்படும் ஆணைக்குழுவுக்கு தெளிவற்ற வரையறுக்கப்பட்ட, பரந்த அதிகாரங்களை இந்த சட்டமூலம் வழங்குகிறது.

இந்த சட்டமூலம் அரசியலமைப்பிற்கு முரணானது மற்றும் சட்டமாக்க முடியாது என்ற அடிப்படையில் சட்டமூலத்தின் அரசியலமைப்புத்தன்மை சவாலுக்கு உட்படுத்தக் கூடியது என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவிக்கிறது. இந்த சட்டமூலம் அமைச்சரால் நிபுணர்களாக இணைத்துக்கொள்ளப்பட்ட தனிப்பட்ட பிரஜைகளுக்கு பரந்த மற்றும் அதிகப்படியான தேடல் மற்றும் பறிமுதல் அதிகாரங்களை வழங்குகிறது.

அவை தன்னிச்சையானவை மற்றும் கணிக்க முடியாதவை. அரசியலமைப்பின் 14(1) (ய)இ (டி)இ (உ) இ (ந)இ (க)இ மற்றும் (ப) மற்றும் உறுப்புரை 10 ஆகியவற்றால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமை போன்ற அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்துவதை இந்த சட்டமூலம் சட்ட விரோதமாக கட்டுப்படுத்தி முடக்குகிறது.

### ‘நிகழ்நிலை பாதுகாப்பு ஆணைக்குழு’ என்றால் என்ன?

நிகழ்நிலை பாதுகாப்பு ஆணைக்குழுவானது அரசியலமைப்பு பேரவையின் அனுமதிக்கு உட்பட்டு இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

இவ் உறுப்பினர்கள் தகவல், தொழில்நுட்பம், சட்டம், ஆளுகை, சமூக சேவைகள், பத்திரிகைத்துறை, அறிவியல், தொழில்நுட்பம் அல்லது முகாமைத்துவம் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு துறையில் தகுதி மற்றும் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். ஆணைக்குழுவானது கீழ்கண்ட விரிவான அதிகாரங்களைக் கொண்டிருக்கும்.

தேசிய பாதுகாப்பு, பொது சுதந்திரம் அல்லது பொது ஒழுங்கிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் அல்லது தீய எண்ணம் மற்றும் விரோத உணர்வுகளை ஊக்குவிக்கும் தவறான அறிக்கைகளை தடை செய்கிறது.

### நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தில் பட்டியலிடப்பட்டுள்ள முக்கிய குற்றங்கள் யாவை?

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலமானது பலவிதமான குற்றங்களுக்கு வழிவகுக்கிறது. இவற்றுக்கு சிறைத்தண்டனை மற்றும், அல்லது அபராதம் உள்ளிட்ட பல்வேறு தண்டனைகள் உள்ளன.

தேசிய பாதுகாப்பு, பொது சுதந்திரம் அல்லது பொது ஒழுங்கிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் அல்லது ‘தீய எண்ணம் மற்றும் விரோத உணர்வுகளை ஊக்குவிக்கும்’ தவறான அறிக்கைகளை தடை செய்கிறது. கருத்துச் சுதந்திரத்தை

> நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலமானது பலவிதமான குற்றங்களுக்கு வழிவகுக்கிறது. இவற்றுக்கு சிறைத்தண்டனை மற்றும், அல்லது அபராதம் உள்ளிட்ட பல்வேறு தண்டனைகள் உள்ளன.
> தேசிய பாதுகாப்பு, பொது சுதந்திரம் அல்லது பொது ஒழுங்கிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் அல்லது தீய எண்ணம் மற்றும் விரோத உணர்வுகளை ஊக்குவிக்கும் தவறான அறிக்கைகளை தடை செய்கிறது. கருத்துச் சுதந்திரத்தை மீறும் வகையில், எதிர்மறையான கருத்துகளை வெளியிடுமாறு தனிநபர்கள், சேவை வழங்குநர்கள் அல்லது இணைய இடைத்தரகர்களுக்கு ஆணைக்குழு உத்தரவுகளை பிறப்பிக்கலாம்.



மீறும் வகையில், எதிர்மறையான கருத்துகளை வெளியிடுமாறு தனிநபர்கள், சேவை வழங்குநர்கள் அல்லது இணைய இடைத்தரகர்களுக்கு ஆணைக்குழு உத்தரவுகளை பிறப்பிக்கலாம்.

நீதிமன்ற உத்தரவு இல்லாமல் உள்ளடக்கத்தை அகற்றுவதற்கான அறிவிப்புகள் மற்றும் பரிந்துரைகளை வழங்குவதற்கான ஆணைக்குழுவின் அதிகாரம் அரசியலமைப்பு உரிமைகளை மீறக்கூடும். இது சேவை வழங்குநர்கள் மற்றும் இறுதி பயனர்களை பாதிக்கும்.

சேவை வழங்குனர்களுக்கான பரிந்துரைகள், ஆணைக்குழுவின் வலைத்தள பதிவு அதிகாரத்துடன் இணைந்து, இணக்கத்தின் மீது தேவையற்ற அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும், இது சுதந்திரமாக நடவடிக்கைகளை நடத்துவதற்கான உரிமையை மீறக்கூடும்.

நீதிமன்ற உத்தரவு இல்லாமல் அணுகலை முடக்குவதற்கான பரிந்துரைகள் அரசியலமைப்பு உரிமைகளை மீறக்கூடும், ஏனெனில் இது சரியான சட்ட ஆய்வு இல்லாமல் தகவல் பரவலைக் கண்காணிக்க அனுமதிக்கிறது.

வழிகாட்டுதல்கள் இல்லாமல் விதிகளை உருவாக்கும் அதிகாரம் (11(த) 12(1) தெளிவான வழிகாட்டுதல்கள் மற்றும் குறிப்பிட்ட அளவுகோல்கள் இல்லாமல் ஆணைக்குழுவின் விதிகளை உருவாக்கும் அதிகாரம் சமத்துவத்திற்கான உரிமையை மீறுகிறது, இது சட்டத்தின் கீழ் வெளிப்படைத்தன்மை மற்றும் சமமான பாதுகாப்பு குறித்த கவலைகளை எழுப்புகிறது.

ஐக்கிய இராச்சியம் போன்ற நியாயாதிக்கங்களில் காணப்படும் இணையம் தொடர்பான சட்டங்களுடன் ஒப்பிடுகையில், இலங்கை நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் தெளிவான வரையறைகள், கருத்துச் சுதந்திரத்திற்கான வலுவான பாதுகாப்புக்கள் மற்றும் விரிவான சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கைகளை வழங்குவதில் பின்தங்கியுள்ளது. ஜனாதிபதியின் அதிகாரங்கள் குவிந்திருப்பதாலும் நிகழ்நிலை பாதுகாப்பு ஆணைக்குழுவுக்கு சுயாதீனமின்மை காரணமாகவும் கவலைகள் எழுகின்றன.

இலங்கை நிகழ்நிலை பாதுகாப்பு சட்ட மூலத்தில் தெளிவு, சுதந்திரம் மற்றும் வினைத்திறன் மிக்க ஒழுங்குமுறை என்பன கவனமாக பரிசீலிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை இந்த வேறுபாடுகள் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றான ஊடகத்துறை அடக்குமுறைக்கு உள்ளாகுமானால், அது ஒட்டுமொத்தமாக நாட்டின் அரசியல், ஆட்சி, பொருளாதாரம், வாழ்வியல் ஒழுங்குமுறை அனைத்தையும் பாதிப்பதோடு நாட்டை அதலபாதாளத்திற்கு இட்டுச் செல்லும் என்பதே யதார்த்தம்.

நாட்டில் ஒரு ‘கொடுங்கோன்மை’ ஆட்சி நடைபெற்றால். அதனை மாற்றுவதற்கான எந்தவொரு சமூக எழுச்சியையும் மேற்கொள்வதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. குறிப்பாக இளையோர் சமுதாயம் அவர்களது ஆக்கபூர்வமான எந்தவொரு சிந்தனையையும் வெளிப்படுத்த முடியாத நிலைமையில் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாக மூளைச் சலவை செய்யப்பட்டவர்களாக இருப்பர்.

ஒட்டுமொத்தத்தில் கூறப்போனால் ஒருவர் சிந்திக்கவோ செயற்படவோ முடியாதவாறு நவீனத்துவ அடிமையாக இருக்கும் நிலை உருவாகும்.




> நாட்டில் ஒரு கொடுங்கோன்மை ஆட்சி நடைபெற்றால். அதனை மாற்றுவதற்கான எந்தவொரு சமூக எழுச்சியையும் மேற்கொள்வதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. குறிப்பாக இளையோர் சமுதாயம் அவர்களது ஆக்கபூர்வமான எந்தவொரு சிந்தனையையும் வெளிப்படுத்த முடியாத நிலைமையில் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாக மூளைச் சலவை செய்யப்பட்டவர்களாக இருப்பர். ஒட்டுமொத்தத்தில் கூறப்போனால் ஒருவர் சிந்திக்கவோ செயற்படவோ முடியாதவாறு நவீனத்துவ அடிமையாக இருக்கும் நிலை உருவாகும்.



## அரசியல் யுக்தியா? ராமர் பூமியா? ராவணன் பூமியா?

# ஒரு நாடு ஒரு கோயிலை இவ்வளவு கொண்டாட வேண்டுமா?



அயோத்தியில் ராமர் கோயிலில் திறப்பு விழா கோலாகலமாக நடந்து முடிந்தது. ஒருபுறம் ஆயிரக்கணக்கான பிரபலங்கள், தொழிலதிபர்கள், அரசியல் தலைவர்கள் எனக் கண்களை கசக்கிக்கொண்டு ஆனந்தக் கண்ணீரில் திளைத்து இருக்கின்றனர்.

மற்றொருபுறம் 'சமயசார்பற்ற நாடு' என்பதற்கு அர்த்தம் என்ன எனத் தங்களுடைய கண்டனங்களை சில பிரபலங்களும், மக்களும் சோஷியல் மீடியாவில் பகிர்ந்து வந்தனர்.

அரசியல் யுக்தியா, ராமர் பூமியா, ராவணன் பூமியா?ஒரு நாடு ஒரு கோயிலை இவ்வளவு கொண்டாட வேண்டுமா? என்பதை எல்லாம் தாண்டி, முக்கியமாக ராமர் கோயிலில் கவனிக்கப்பட வேண்டிய ஒரு விஷயம் இருக்கிறது. அதுதான் நன்கொடை.

2019-ல் ராமர் கோயில் கட்ட உச்ச நீதிமன்றம் சாதகமான தீர்ப்பு அளித்தது. அன்றிலிருந்து ராமர் கோயில் கட்டுமான பணிகளுக்காகப் பலரும் நன்கொடைகளை அளித்து வருகிறார்கள்.

எவ்வளவு நன்கொடை அளிக்கப்பட்டது, அதில் எவ்வளவு பயன்படுத்தப்பட்டது, யாரெல்லாம் நன்கொடை வழங்கி இருக்கிறார்கள் என்ற விவரங்களைப் பார்ப்போம்.

70 ஏக்கர் பரப்பளவு கொண்ட வளாகத்தில் 161 அடி உயரத்தில், 2.7 ஏக்கர் பரப்பளவில் ராமர் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான கட்டுமான செலவு மட்டும் 1,800 கோடி ரூபாய். அதில் 1,100 கோடி ரூபாய் இதுவரை செலவிடப்பட்டு இருக்கிறது.

சமீபத்தில் கட்டப்பட்ட இரண்டாவது விலையுயர்ந்த கட்டடமாக ராமர் கோயில் உள்ளது. 2,989 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட சர்தார் வல்லபாய் படேலின் 'ஒற்றுமை சிலை' முதல் இடத்திலும், 836 கோடி மதிப்பில் கட்டப்பட்ட புதிய நாடாளுமன்றக் கட்டடம் மூன்றாவது இடத்திலும் உள்ளது.

2020-ல் ராமர் கோயில் கட்டுமானம் மற்றும் பராமரிப்புக்காக மத்திய அரசால் 'ஸ்ரீ ராம் ஜென்மபூமி தீர்த்த க்ஷேத்ரா அறக்கட்டளை' உருவாக்கப்பட்டது. அப்போது 3,500 கோடி



கியவர் என்ற பெருமையைக் குஜராத்தைச் சேர்ந்த மொராரி பாபு பெற்றுள்ளார். ஆன்மீகத் தலைவரும், ராம கதையின் வசனகர்த்தாவான இவர் ராமாயணத்தைப் பரப்புவதில் ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக முனைப்போடு செயல்பட்டு வருகிறார்.

ராமர் கோயில் கட்டுமான பணிகளுக்காக பாபு 18.6 கோடி ரூபாய் நன்கொடை அளித்துள்ளார். இந்தியாவுக்குள் 11.30 கோடி ரூபாயும், இங்கிலாந்து மற்றும் ஐரோப்பாவிலிருந்து 3.21 கோடி ரூபாயும், அமெரிக்கா, கனடா மற்றும் பல்வேறு நாடுகளில் இருந்து 4.10 கோடி ரூபாயும் நிதியாகத் திரட்டி இருக்கிறார்கள்.



நன்கொடை வரை கோயிலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

முகேஷ் அம்பானி, ரத்தன் டாடா, குமார் மங்கலம் பிர்லா எனப் பல பெரிய தொழில்நுட்ப நிறுவனங்கள் ராமர் கோயில் கட்டுவதற்கான நன்கொடை அளித்துள்ளன.

அக்ஷய் குமார், அனுபம் கெர் மற்றும் குர்மீத் சௌத்ரி உள்ளிட்ட திரை பிரபலங்களும் கோயில் கட்டுவதுக்கு பங்களித்துள்ளனர்.

பவன் கல்யாண் 30 லட்சம் ரூபாயை நன்கொடையாக அளித்தார். நடிகை ஹேமமாலினி வெளியே அறிவிக்காத ஒரு தொகையை அளித்து இருக்கிறார். சகுனி படத்தின் மூலம் பிரபலமாக அறியப்பட்ட பிரணிதா சுபாஷ் 2021 -ல் 1 லட்சம் ரூபாய் வழங்குவதாகக் கூறியிருந்தார்.

மாநில அரசுகள், தொழிலதிபர்கள், பிரபலங்கள் பலரைத் தாண்டி ராமர் கோயில் கட்டுமான பணிகளுக்காகத் தனிநபர்களும் நன்கொடை வழங்கியுள்ளனர்.

வைர வியாபாரம் செய்யும் திலீப் குமார் என்பவர் 101 கிலோ தங்கத்தை வழங்கி இருக்கிறார். ராமர் கோயில் கட்டுமான பணிகளுக்கு அதிகபட்ச நன்கொடையை வழங்




பெறப்பட்ட நன்கொடைகளில் இருந்து 51.4% பணம் மட்டுமே மொத்த கட்டுமானத்துக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை பராமரிப்பு மற்றும் பிற நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்படும் என்று அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

இதைத் தாண்டி உலகம் முழுவதும் உள்ள மக்கள், ஸ்ரீ ராம் ஜென்மபூமி தீர்த்த க்ஷேத்ரா அறக்கட்டளைக்கு கூகுள் பே, பாரத்பே மற்றும் யுபிஐ மூலம் நன்கொடை வழங்குவதற்கான வசதிகளையும் ஏற்படுத்தியுள்ளது.

> சமீபத்தில் கட்டப்பட்ட இரண்டாவது விலையுயர்ந்த கட்டடமாக ராமர் கோயில் உள்ளது. 2,989 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட சர்தார் வல்லபாய் படேலின் 'ஒற்றுமை சிலை' முதல் இடத்திலும், 836 கோடி மதிப்பில் கட்டப்பட்ட புதிய நாடாளுமன்றக் கட்டடம் மூன்றாவது இடத்திலும் உள்ளது.

# ஈழத் தமிழர் போராட்டத்தில் பாலஸ்தீன கவிதைகளின் தாக்கம்



ஐங்கரன் விக்னேஸ்வரா




ஈழத்தின் படுகொலைகளுக்கு நிகராகவே பாலஸ்தீனத்தில் படுகொலைகள் நிகழ்ந்துள்ளதையும் கவிதைகள் ஆவணப்படுத்தி நிற்கின்றன. இந்த இரு மண்ணிலும் கவிதை ஒரு பேராயுதமாகவும், பெரும் போராயுதமாகவும் திகழ்ந்துள்ளதை காண முடிகிறது.

## கவிதை பேராயுதமாக போராயுதமாக:

ஈழத்து போர்க்கால இலக்கியப் பரப்பில் பாலஸ்தீனக் கவிதைகள் பெரும் தாக்கத்தினை உருவாக்கியுள்ளன. ஏனெனில் இரு போராடும் மக்களும் அரசின் ஆக்கிரமிப்புக்கு, அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்தவர்கள். துப்பாக்கிகளைக் காட்டிலும் கவிதை ஆட்சியாளர்களை, அடக்குமுறையாளர்களை கலங்கடிக்கும் பெரும் போராயுதமாக ஓர் காலத்தில் விளங்கியது.

வரலாற்று ரீதியில் பாலஸ்தீனத்துக்கு என்று செறிவான இலக்கிய மரபு உண்டு. மிக நுட்பமான இலக்கண வரம்புக்கு உட்படுத்தப்பட்ட கவிதை வடிவங்கள், நாடகங்கள், நாவல்கள் பாலஸ்தீனத்தில் படைக்கப்பட்டுள்ளன. ஆனால் 1948ஆம் ஆண்டு இஸ்ரேல் தோற்றம் பெற்றபோது பாலஸ்தீன இலக்கிய வாழ்வு திடீரென்று மூச்சை இழந்தது.

ஆயினும் துண்டிக்கப்பட்ட உயிர் மூச்சு மீள சுவாசித்தது. போரின் தோல்வி, தோழர்களின் இழப்பு, சிறைக்காவல், சித்திரவதைக்கூடம், சிறுவர்கள் மீதான தாக்குதல், ஐக்கிய நாடுகள் சபையின் பாராமுகம், தாயகம் மீதான ஏக்கம் என கவிதையின் பாடுபொருள்கள் பாலஸ்தீனத்தில் மீள உயிர் பெற்றன.

ஆயினும் பலநூறு இலக்கியப் படைப்புக்கள் ஆக்கிரமிப்பு இராணுவத்தால் அழிக்கப்பட்டன. மிகச் சில அச்சுநூல்களும் கைப்பிரதிகளும் மட்டுமே காப்பாற்றப்பட்டன.

இஸ்ரேல் ஆக்கிரமிப்பில் பல பாலஸ்தீன கவிஞர்களை சிறையில் அடைத்து வைத்து, அவர்களின் கவிதைகளை தடை செய்தனர். ஆண் கவிகளுக்கு இணையாக பெண் கவிகளும் போரியல் கவிதைகளை சிறப்பாக யாத்தனர். அவர்களின் கவிதைகள் தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டன.

## எம்.ஏ.நுஃமான் தொகுத்த பலஸ்தீனக்கவிதைகள் நூல்:

1980களின் ஆரம்பத்தில் ஈழத் தமிழர் போராட்டத்தில் பாலஸ்தீன கவிதைகளின் தாக்கம் பாரிய வீச்சைக் கொண்டிருந்தது. பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் தொகுத்த 'பலஸ்தீனக் கவிதைகள்' கல்முனை வாசகர் சங்க பதிப்பாக நவம்பர் 1981இல் வெளியாகியது. இந்நூலின் முதலாவது பதிப்பில் ஒன்பது பலஸ்தீனக் கவிஞர்களின் முப்பது கவிதைகள் வெளியாகின. மஹ்முட் தர்விஷ், பௌசி அல் அஸ்மார், றஷிட் ஹுசைன், சலும் ஜூப்றான், தௌபிக் சையத், அன்தோய்னே சுபாறா, பத்வாது கான், சமீஹ் அல் காசிம், டூயின் பசைசோ ஆகிய புகழ்பெற்ற பாலஸ்தீன கவிஞர்களின் கவிதைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

அத்துடன் பாலஸ்தீனக் கவிதைகள் பற்றி கடாகர்மி எழுதிய கட்டுரை ஒன்றும் இடம் பெற்றுள்ளது. இத்தொகுப்பிலுள்ள சமீஹ்



அல் காசிமின் ஏழு கவிதைகளை மொழிபெயர்த்தவர் கவிஞர் முருகையன். ஏனையவற்றை பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் மொழிபெயர்த்துள்ளார்.

பாலஸ்தீன எழுத்தாளர்கள் பலரின் எழுத்துலகின் மையத்தில் பாலஸ்தீனப் பேரழிவு தெளிவாக வெளிப்பட்டு உள்ளது. ஏதிலிகளாக்கப்பட்ட, குடிபெயர்ந்த, ஊனமாக்கப்பட்ட மக்களின் வாழ்வில் விழும் துயரப் பெருநிழலை பல்வகைப்பட்ட இலக்கிய வடிவங்களையும் புனைவு வகைமைகளையும் கையாண்டு உலகின்முன் சித்தரிக்க இவர்கள் முயற்சி செய்துள்ளனர்.

1948 இல் இஸ்ரேலியர்கள் பல்லாயிரம் பாலஸ்தீனர்களைப் படுகொலை செய்து நூறாயிரத்துக்கும் மேற்பட்டவர்களை தாயகத்தை விட்டு வெளியேற்றியபோது பல நூறு படைப்புக்கள் உருவாகிய போதும், அவை அழிக்கப்பட்டு விட்டன.

## காஸா மீதான படையெடுப்பும் பாலஸ்தீனர் வெளியேற்றமும்:

மீண்டும் இரண்டாம் முறை 1967 ஆம் ஆண்டு மேற்கு கரை மற்றும் காஸா பகுதிகள் மீது இஸ்ரேல் படையெடுத்தபோது இது நிகழ்ந்தது. பெரும்பாலும் அகதி முகாம்களில் வாழ்ந்து கொண்டிருந்த பாலஸ்தீனர்கள் தம் தாய் மண்ணை விட்டு மீண்டுமொரு முறை அகதிகளாய் வெளியற வேண்டியதாயிற்று. இன்றும் பாலஸ்தீனிய வெளியேற்றம் தொடர்கிறது. நாடு கடத்தல் மட்டுமல்ல, காஸா மீதான படையெடுப்பால் பெருமளவு பாலஸ்தீன மக்கள் வெளியேறு கின்றனர்.

## பாலஸ்தீன புலம்பெயர் இலக்கியம்:

1948ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு பின்னர் பாலஸ்தீனத்தில் தங்கள் நினைவுகளைக் கொண்டு தம் தாய்மண்ணைச் சித்தரிக்க முயற்சி செய்தனர். தொலைவிலிருந்த தாயகத்தைத் தம் தந்தையர், அன்னையர், தாத்தாக்கள், பாட்டிகள் சொன்ன உயிர்ப்பு மிகுந்த கதைகளைக் கொண்டு புலம்பெயர்ந்த மண்ணில் பிறந்தவர்கள் அறிந்து கொண்டனர்.

அவர்களது பாலஸ்தீனம் இலக்கியத்தில் ஒரு புதிய இருப்பை அடைந்திருக்கிறது- இருபதாம் நூற்றாண்டின் பின்பாதியில் வெவ்வேறு தலைமுறையினரால் எழுதப்பட்ட கவிதைகள், சிறுகதைகள், நாவல்களில் பாலஸ்தீனம் தன்னை நிறுவிக் கொண்டிருக்கிறது.

போராட்டத்தில் ஏற்பட்ட பிளவுகள் மற்றும் தடைகளைக் கணக்கில் கொண்டால் பாலஸ்தீன போராட்டத்தின் நம்பிக்கையைத் தக்க வைத்துக் கொள்வதில் முதன்மை முக்கியத்துவம் கொண்டதாக இலக்கியம் இருந்து வருவதை மறுக்க முடியாது.

பாலஸ்தீனத்தை அதன் தொலை தூரத்தில் இருந்து மீட்டு, கூட்டுச் சிந்தனையில் அதற்குரிய இடத்தை இலக்கியமே காப்பாற்றிக் கொடுத்திருக்கிறது. அந்த வகையில், பாலஸ்தீன இலக்கியமானது புலம்பெயர் இலக்கியமாக, உலகில் அடையாளத்துக்கான தேடல், சிதறுண்ட வாழ்க்கை அனுபவங்களாலும் இடம் மாறிய நம்பிக்கைகளாலும் படைக்கப்பட்ட எழுத்து, மானுட துயரத்தின் ஆவணமாக விளங்குகிறது.




## பாலஸ்தீன இலக்கிய ஆளுமைகள்:

1948ஆம் ஆண்டுக்குப்பின் படைக்கப்பட்ட பாலஸ்தீன இலக்கியம் புலம்பெயர் இலக்கியமானது, பாலஸ்தீனர்கள் தம் தாய்மண்ணை விட்டு வன்முறையால் விரட்டப்பட்ட துயர வரலாற்றை பிரதிபலிக்கின்றது.

பாலஸ்தீன இலக்கியத்தின் மகத்தான ஆளுமைகளான மஹ்மூத் தார்விஷ், (Mahmoud Darwish), எமில் ஹபிபி (Emile Habiby), பட்வா டூகான் (FadwaTouqan), சாஹர் கலிபே (SaharKhalifeh) போன்றோர் பாலஸ்தீனத்தின் உள்ளிருந்து எழுதினார்கள் என்றாலும், மற்றய படைப்புகள் பெரும்பாலானவை புலம்பெயர்ந்த எழுத்தாளர்களால் எழுதப்பட்டவை. அதாவது, அரேபியா, ஐரோப்பா, அல்லது அமெரிக்காவில் இருந்தவர்களின் எழுத்தே பாலஸ்தீன புலம்பெயர் இலக்கியமாக புலப்படுகிறது.

தமிழில் வெளியான பலஸ்தீனக் கவிதைகள் இரண்டாம் பதிப்பில் வெளிப்படையான அரசியல் சார்வுடைய பலஸ்தீனப் படைப்பாளிகளின் வாழ்நிலை அனுபவத்தின் அடிப்படையில் அமைந்த கவிதைகளாகும்.

## பாலஸ்தீன பெண் கவிஞர்கள் :

இரண்டாம் பதிப்பில் 15 கவிஞர்களின் 71 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. நிசார் கப்பானியும் ஃபத்வா துக்கான் தவிர்ந்த ஏனைய ஐந்து பெண் கவிஞர்களும் இத்தொகுதியில் புதிதாக இடம்பெற்றனர். நூல் விபரம் 1981 இல் வெளிவந்த முதலாவது பதிப்பில் 9 கவிஞர்களின் 30 கவிதைகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாலஸ்தீனர்களது தனித்துவம் கொண்ட, புதுவித இலக்கிய நடை தம் மண்ணை இழந்த மக்களின்துயர்மிகுர்ந்த பாலஸ்தீன நக்பாவை (பேரழவு) எழுத்தில் கைப்பற்றும் வண்ணம் உலகெங்கும் வியாபித்தது. குறிப்பாக, கவிஞர் (மஹ்மூத் தார்விஷ் (Mahmoud Darwish) (1941-2008), நாவலாசிரியர்கள் கஸ்ஸான் கனாபானி (Ghassan Kanafani) (1936-1972), ஜப்ரா இப்ராஹிம் ஜப்ரா (Jabra Ibrahim Jabra) (1920 -1994), மற்றும் எமில் ஹபீபி (Emile Habiby) (1921-1996), இவர்களில் தனித்துவம் மிகுந்து நிற்கின்றனர்.

## ஷெரீப் எஸ். எல்முசாவின் குரலின் ஈரம் :

ஷெரீப் எஸ். எல்முசா (Sharif Elmusa ) அமெரிக்காவில் வாழும் பாலஸ்தீனக் கவிஞர். பேராசிரியராகப் பணியாற்றுகிறார்.




அவரின் குரலின் ஈரம் கவிதையில் ஆகாய ஆகாயத்திலிருந்து குண்டு போடும் விமானப்படை குண்டு வீச்சாளரிடம் சில கேள்விகள் என்பதாக இந்தக் கவிதை வெளிப்படுகிறது.

பொம்மைகளுடன் விளையாடிக் கொண்டிருக்கும் குழந்தைகளின் மீது ஏன் குண்டு போடுகிறீர்கள் என்ற கேள்விக்கு விமானப்படை குண்டு வீச்சாளர் தான் குழந்தைகளைக் குறிவைத்து குண்டு போடவில்லை என்கிறார். ஷெரீப் எஸ். எல்முசா (Sharif Elmusa ) அமெரிக்காவில் வாழும் ஒரு பாலஸ்தீனக் கவிஞர்.

தேன்கூட்டில் வசிக்கும் தேனீக்களைப் போல நகரெங்கும் குழந்தைகள் வசிக்கிறார்கள். அவர்கள் மீது தானே உங்கள் குண்டு விழுகிறது எனப் பதில் கேள்வி கேட்கப்படுகிறது.

இன்னொரு கவிதையில் அகதிகள் முகாமிற்குப் பெயரில்லை என்ற வரி இடம்பெறுகிறது. அதைக் கடந்து செல்ல முடியாமல் திரும்பத் திரும்ப வாசித்துக் கொண்டேயிருந்தேன். போரும் போரின் விளைவாக அழிந்த ஊர்களின் நினைவுகளுமே அவரது கவிதைகளில் பிரதானமாக வெளிப்படுகின்றன.காஸா என்பது திறந்த வெளிச்சிறைச்சாலை. அது ஒரு மாபெரும் கூண்டு என நீளும் கவிதையில் வெளிப்படுத்தி உள்ளார்.

## மக்மூத் தார்வீஷ் கவிதைகள்:

இது தனது அகதி வாழ்வின் துயரைப் போன்றதே என்றும் உணருகிறார்.

குறைபாடுள்ள நிலப்பரப்பு என்பது பாலஸ்தீனத்தின் அடையாளம். ஒரு பக்கம் பாலஸ்தீனத்தின் யுத்தம், அழிவு என்ற சூழல் நிலவுகிறது. இன்னொரு பக்கம் அடுத்த வேளை உணவிற்கு என்ன சாப்பிடலாம் என யோசித்துக் கொண்டிருக்கும் அவலமிக்க வாழ்வை 1941-ல் அல்பிர்வே என்னும் பாலஸ்தீன கிராமம் ஒன்றில் பிறந்த மக்மூத் தார்வீஷ் தனது கவிதையில் எழுதியுள்ளார்.

ஏழு வயதிலே கிராம மக்களுடன் இஸ்ரேல் ராணுவத்தால் விரட்டப்பட்ட மக்மூத் தார்வீஷ், பாலஸ்தீனத்தை விட்டே துரத்தப்பட்டார். அந்த கிராமத்தை தரைமட்டமாக்கியது ராணுவம். பின்னர் அங்கு யூத குடியேற்றம் நிகழ்ந்தது. தர்விஷ் குடும்பம் சிறிது காலத்திற்கு பிறகு பாலஸ்தீனத்தில் ‘சட்டவிரோதமாக’ குடியேறியது.

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனத்தில்,1960களில், அரசாங்கத்தால் அவர் தீவிரமாககண்காணிக்கப்பட்டார். பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாக நின்ற இஸ்ரேல் கம்யூனிஸ்ட் கட்சியில் 1961-லிருந்து இணைந்து பணியாற்றினார். 1970-க்கு பின்னர் சொந்த நாட்டில் பெரிதும் இன்னலுக்கு உள்ளாகியதால் மாஸ்கோ, பாரீஸ் என்று பல்வேறு நாடுகளில் தஞ்சமடைந்தார். யாசர் அராபத்தின் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் (PLO) இணைந்தார். பாலஸ்தீனத்தில், சுயாட்சி அதிகாரம் கொண்ட




ஒரு இடைக்கால அரசு நிர்வாகத்திற்கு வழிகோலும் ஆஸ்லோ ஒப்பந்தத்தை நிராகரித்து, PLO வின் செயற்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து ராஜினாமா செய்தார். இறுதி மூச்சு வரை கம்யூனிஸ்ட் உலகப்பார்வையை கொண்டிருந்தார் கவிஞர் தர்விஷ்.

அவர் சென்ற நாடுகளில் எல்லாம் தனது நாட்டையும், மக்களையும், அவர்களின் விடுதலைக் கனவையும் சுமந்தார். அவருடைய “Passers by in Passing Words‘ என்னும் கவிதை அரேபிய மக்களால் விரும்பி வாசிக்கப்பட்டு மக்கள் கவிஞர் ஆனார். மக்கள் மருத்துவர், மக்கள் தலைவர் போன்று தர்விஷ் ஒரு மக்கள் கவிஞர்.

## முற்றுகையின் கீழ் ரமல்லா :

சமூக உணர்வின் ஆழம் சிறந்த படைப்புகளை பிரசவிக்கும் என்பதற்கு மக்மூத் தார்வீஷின் கவிதைகள் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

இனவெறிக்கு எதிராக இனவாதத்தை அல்ல, சர்வதேசியத்தை முன்வைத்தார். இந்த கவிதை ‘முற்றுகையின் கீழ்’ பாலஸ்தீன நகரம் ரமல்லா முற்றுகைக்குள்ளான போது எழுதப்பட்டது. ரமல்லா அவர் பிறந்த கிராமத்தை உள்ளடக்கிய மலை அடிவாரம். பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அலுவலகம் அங்கு செயல்பட்டது. முஸ்லிம்களின் சம எண்ணிக்கையில் கிறிஸ்தவர்களும் வாழ்ந்தார்கள்.

*முற்றுகை நிலையில், காலம்*
*நித்தியத்துவத்தில் ஊன்றி நிற்கும் வெளி ஆகிறது.*
*முற்றுகை நிலையில், வெளி நேற்றையும்,*
*நாளையையும் தவறவிட்ட காலமாகிறது.*
*புதிய நாள் ஒன்றில் நான்*
*வாழப்புகும் ஒவ்வொரு*
*கணத்திலும் ஒரு தியாகி என்னை வட்டமிடுகிறார்.*
*என்னிடம் கேள்விகள்*
*தொடுக்கிறார்:*
*நீ எங்கே சென்றாய்?*
*நீ எனக்களித்த ஒவ்வொரு*
*வார்த்தையையும் திரும்ப*
*அகராதிக்கு*
*எடுத்துச் செல்*
*பின்னர் தூங்குவோரை பின்னொலியின்*
*சத்தத்திலிருந்து விடுவி*

என அக்கவிதையில் விபரித்துள்ளார்.

ஐங்கரன்




# 50 வது ஆண்டு நினைவுகளில் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை!

## ஐம்பது ஆண்டுகளை கடக்கும் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை:

> தமிழ் மக்கள் மீதான கலாசார அழிப்பின் ஆரம்பமே 1974 தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையாகும். 50 வது ஆண்டு நினைவுகளில் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையை 10 ஜனவரி 2023 தமிழர் தாயகம் அனுஷ்டிப்பதை ஒட்டி இச் சிறப்புக் கட்டுரை பிரசுரமாகிறது

ஒரு இனத்தை அழிக்குமுன் அதன் சுவடுகளை அழி, அடையாளத்தை அழி என்பதே எதிரிகளின் போருயாபமும், தந்திரமாகும். அதற்கு ஒப்பாக, ஈழத்தில் தமிழர் கலாசார படுகொலையின் ஆரம்பம் தான் 1974 யாழ் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையாகும்.

### சிறிமா அரசின் இனபாகுபாடு:

தமிழ் மரபையும், வரலாற்றையும் காத்து நிகழ இருந்த, தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை தமிழ் மக்களின் வரலாற்றில் என்றுமே துடைக்க முடியாத கறையாகியுள்ளது.

சிறிலங்கா அடக்குமுறை அரசுகளின் தொடர்ச்சியான 1958 ,1977 , 1983 இல் நிகழ்ந்த திட்டமிடப்பட்ட இனக் கலவரங்களால் தமிழர்களின் பொருளாதார வளங்களும், அறிவியல், பண்பாட்டு நிலையங்களும் அழித்து நாசமாக்கப்பட்டன. தமிழர் கலாசாரத்தை அழிக்க நிகழ்ந்த பண்பாட்டுப் படுகொலைதான் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையாகும்.

ஈழத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி தினமான ஜனவரி 10, 1974 இல் மாநாட்டில் கலந்து கொண்டவர்களில் ஒன்பது பேர் இலங்கை காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டால் மரணம் அடைந்தனர்.

சிங்கள பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டினால் மின்கம்பிகள் அறுந்து மக்கள் திரண்டிருந்த இடத்தில் விழுந்தமை, ஆயிரக் கணக்கில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எனத் திரண்டிருந்த தமிழ் மக்கள் மத்தியில் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை


விழாக் கோலத்தில் யாழ் நகர் 1974 தை

வீசியமை, இரவு நேரத்தில் ஏற்பட்ட இக்குழப்பத்தினால் நிகழ்ந்த விபத்துகள், இந்தக் குழப்பங்களினால் இந்த மரணங்களுக்குக் காரணமாயின.

உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்த விடாமல் அப்போதைய சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசு, காவல்துறையினரை அனுப்பி கலவரத்தை ஏற்படுத்தியது. இதன்போது ஒன்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதுட்டுமன்றி தமிழர்கள் மனத்தில் நீங்காத வடுக்களாக இந்தப் படுகொலைச்சம்பவம் பதியப்பட்டது.

## மேயர் அல்பிரட் துரையப்பாவின் வஞ்சகம்:

யாழ்ப்பாணத்தில் தமிழராய்சி மாநாடு நடைபெறுவதை அப்போது ஆட்சியிலிருந்த சிறிமாவோ அரசாங்கம் விரும்பவில்லை. அரசாங்கம் இதனை ஏற்றுக்கொள்ளாது கொழும்பில் நேரடியாகவும், யாழ்ப்பாணத்தில் மாநகர மேயர் ஊடாகவும் தொடர்ச்சியான தடைகளை ஏற்படுத்தியது. அத்துடன் மாநாடு நடைபெறுவதற்கான முக்கிய அரங்குகளின் அனுமதி இறுதி நேரம் வரை மறுக்கப்பட்டிருந்தது.

அத்துடன் மாநாட்டில் கலந்து கொள்ள பல வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா மறுக்கப்பட்டது. இவைகள் எவ்வாறு இருந்தாலும், மாநாட்டை சிறப்பாக நடத்த வேண்டும் என்ற மனவெழுச்சி அமைப்பாளர்களிடமும், மக்களிடமும் இருந்தது. மக்கள் அலை அலையாகத் திரண்டதைக் கண்ட சிங்கள அரசாங்கம் சற்றுக் கீழிறங்கி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா வழங்கியது.

அதேவேளை மாநாட்டுக் குழுத் தலைவர் அன்றைய நீதியாளர் தம்பையா மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு விரும்பவில்லை. ஆகையால் அவர் தலைவர் பதவியிலிருந்து விலக பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில் தமிழாராய்ச்சி மாநாடு மூன்றாம் திகதி ஆரம்பமாகி பத்தாம் திகதிவரை யாழ். முற்றவெளி திறந்த வெளியரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

கோலாகலம் பூண்டிருந்த யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இருந்தும் இலட்சக்கணக்கான மக்கள் யாழ். நகரம் வந்தார்கள். அதுவரை நடைபெற்ற எந்தவொரு மாநாடும் இதுபோல சிறப்பாக நடைபெற


09 பேருக்காக 1975 ல் நிறுவப்பட்ட நினைவுக் கல் தூண்

வில்லை. ஜனவரி 10ஆம் திகதி மாநாட்டுக்கு வருகை தந்திருந்த அறிஞர்கள் கௌரவிப்பு மற்றும் விருது வழங்கல் என்பன யாழ் திறந்த வெளி அரங்கில் நடாத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. அன்றைய தினம் குடாநாடுவிழாக்கோலம் பூண்டிருந்தது.

ஆனாலும் குறித்த நிகழ்வைத் தடுக்கும் வண்ணம் அப்போது மேயராக இருந்த சிறிமாவின் ஆதரவாளர் அல்பிரட் துரை






10.01.1974
தமிழ்மீது காதல்கொண்டனர்
கொலை வெறிக்காளாகி மாண்டனர்.

சி. நந்தகுமார் | வே. கேசவராசன் | ப. சரவணபவன்

இ. சிவானந்தம் | வ. யோகநாதன் | இ. தேவரட்னம்

பி. சிக்மாறிலிங்கம் | சி. ஆறுமுகம் | சி. பொன்னுத்துரை

இலங்கையில் நடைபெற்ற நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று, சிங்கள அரசின் காவற் படையினரின் காட்டுமிராண்டித்தனத்திற்குப் பலியான ஒன்பது தமிழர்கள்.

யப்பா யாழ் திறந்த வெளியரங்களில் நிகழ்வுகளை நடத்த அனுமதி தர மறுக்க, குறித்த திறந்த வெளி அரங்கம் மூடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதனால் குறித்த நிகழ்வுகள் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகின. பல்லாயிரக் கணக்கில் மக்கள் கூடியிருந்ததால் வீரசிங்கம் மண்டபம் மக்கள் கூட்டத்தால் நிரம்ப, ஏனைய பொதுமக்கள் வீரசிங்க மண்டபத்திற்கு முன்னாலும், யாழ் முற்றவெளியிலும் தங்கியிருந்தனர்.

## இறுதி நாள் நிகழ்வு:

1974 ஆம் ஆண்டு ஜனவரி பத்தாம் திகதி நிகழ்வின் இறுதி நாளாகக் கொண்டாடப்பட்டது. இறுதி நிகழ்வாக அறிஞர்கள் தமிழின் பெருமைகளையும், ஈழப் பண்பாட்டின் பெருமையையும் பற்றிப் பேசினார்கள்.

ஈழத் தமிழ் மக்கள் உணர்வோடு கைதட்டி உற்சாகப்படுத்தினர்.

இறுதியாக தமிழகப் பேராசிரியர் 'நைனா முகமது' பேசிக் கொண்டிருக்கும் போது யாழ். உதவி காவற்துறை மா அதிபர் சந்திரசேகரா தலைமையிலான காவற்துறை மாநாட்டில் கலந்து கொண்டிருந்த மக்களைத் தாக்கியதுடன், துப்பாக்கியாலும் சுட்டார்கள்.

இச் சம்பவத்தில் ஒன்பது பொது மக்கள் உயிரிழந்தார்கள். பல தமிழ் மக்கள் காயமடைந்தனர். நிகழ்ச்சி அரங்குகள் சேதமடைந்தன. இம் மாநாட்டினைக் குழப்பிய யாழ் உதவிக் காவற்துறை அத்தியட்சகர் சந்திரசேகரா பின்னர் சிறீமாவோ பண்டாரநாயக்கா அவர்களால் காவற்துறை அத்தியட்சகராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளான 10.01.1974 அன்று கொல்லப்பட்ட மக்களின் விபரம் வருமாறு:

**வேலுப்பிள்ளை கேசவராஜன் (வயது 15 - மாணவன்)**
**பரம்சோதி சரவணபவன் (வயது 26)**
**வைத்தியநாதன் யோகநாதன் (வயது 32)**
**ஜோன்பிடலிஸ் சிக்மறிங்கம் (வயது 52 - ஆசிரியர்)**
**புலேந்திரன் அருளப்பு (வயது 53)**
**இராசதுரை சிவானந்தம் (வயது 21 - மாணவன்),**
**இராஜன் தேவரட்ணம் (வயது 26)**
**சின்னத்துரை பொன்னுத்துரை (வயது 56 - ஆயுள்வேத வைத்தியர்)**
**சின்னத்தம்பி நந்தகுமார் (வயது 14 - மாணவன்)**

ஆகியோர் இம் மாநாட்டில் களப்பலியாகினர்.

இந்த இறப்புகளின் பின்னர் தீவிரமாக வெளிப்பட்ட தமிழ்த் தேசியவாத போக்கினால், ஈழப் போராட்டம் பின்னர் தீவிரமாக வளர்ச்சியுறத் தொடங்கியது.

50 வது ஆண்டு நினைவுகளில் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையை 10 ஜனவரி 2024 தமிழர் தாயகம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கிறது. தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை தமிழ் மக்களின் வரலாற்றில் என்றுமே அழிக்க முடியாத வடுவை உருவாக்கியுள்ளது.





# ஈழத் தமிழருக்கு குரல் கொடுப்பதில் முன்னுதாரணமான நாடு கனடா

ஈழத் தமிழ் மக்களின் நீதிக்கும் உரிமைகளுக்கும் குரல் கொடுப்பதில் கனடா நாடு தொடர்ந்தும் நம்பிக்கையூட்டுகிறது. உலக அரங்கில் ஒடுக்கப்பட்ட மக்களின் மனித உரிமைகளுக்கும் நீதிக்கும் குரல் கொடுப்பதில் நீதியின் முகமாக கனடா விளங்குகிறது.

அண்மைய காலத்தில் சிறிலங்கா அரசுக்கு பெரும் மன வுளைச்சலை ஏற்படுத்திய நாடாக கனடா இருப்பதும், சில நகர்வுகளை புலம்பெயர் அமைப்புக்கள் சிலவற்றைக் கொண்டு சிறிலங்கா அரசு முன்னெடுப்பதும் நாம் அறிந்த விடயங்கள்தான்.

இந்த நிலையில் இந்த நகர்வுகளுக்குப் பிறகும் ஈழத் தமிழ் சமூகத்தின் உயர்வுக்கு கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கொடுத்துள்ள குரல் சிறிலங்காவுக்கு பெருத்த பதிலாகவும் அமைந்துவிடுகிறது.



தைப்பொங்கல் நிகழ்வொன்றில் கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் பங்கெடுத்து கூறிய கருத்துக்கள், ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் நம்பிக்கையைப் புதுப்பித்துள்ளன.

இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமைகள் சவால்களுக்கு உட்பட்டு வருவதாகவும் தமிழ் சமூகத்துடன் கனடா தொடர்ந்தும் பயணிக்கும் என்றும் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் கனடா சர்வதேச அமைப்புக்களுடன் இணைந்து தமிழர் நலன் தொடர்பில் செயற்பட்டு வருவதாக அவர் கூறியிருப்பதும் கவனத்தில் கொள்ள வேண்டியதாகும். மீண்டும் உலக அரங்கில் மாண்புமிகு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்களின் பேச்சு ஈழத் தமிழருக்கு நம்பிக்கை ஏற்படுத்தியுள்ளது.

அது மாத்திரமின்றி, 1983ஆம் ஆண்டு இலங்கையில் வன்முறைகள் ஆரம்பித்த காலத்தில் தமது தந்தையாரின் தலைமையிலான லிபரல் கட்சி 1800 இலங்கை தமிழர்களை கனடாவில் குடியேற்றியது என்றும் இந்த தொகை கடந்த பல தசாப்தங்களில் அதிகரித்து இன்று புலம்பெயர்ந்த தமிழர்கள் அதிகமாக வசிக்கும் நாடாக கனடா பார்க்கப்படுவதாகவும் கனடாவின் வளர்ச்சிக்கு தமிழர்களின் பங்களிப்பு வியக்கத்தக்கது என்றும்கூறினார். இதனால் 2016ஆம் ஆண்டு, ஜனவரி மாதத்தை தமிழர் வரலாற்று மாதமாக கனேடிய அரசாங்கம் பிரகடனம் செய்தது என்றும் கனேடியப் பிரதமர் கூறியிருக்கின்றார்.

போர் முடிவடைந்து இன்றைக்கு 15 ஆண்டுகள் ஆகின்ற போதும், ஈழத் தமிழ் மக்களுக்கான நீதியை வழங்காமல்



காலத்தை இழுத்தடிக்கும் வகையில் சிறிலங்கா அரசு காய்களை நகர்த்தி வருகின்றது.

ஐக்கிய நாடுகள் அவையின் அமர்வுகளும் அணுகுமுறைகளும் அதில் பதவி வகிக்கும் ஆணையாளர்களின் செயற்பாடுகளும் ஈழத் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதாய் இல்லை என்ற நிலையில், அதற்கப்பால் ஈழத் தமிழர் இனப்படுகொலை விவகாரம் நகர வேண்டியிருக்கிறது.

இந்த நிலையில் பொறுப்புக்கூறல் மற்றும் இனப்படுகொலைக்கான நீதி சார்ந்து கனடா உலகின் நீதிமுகமாகவும் விளங்குகின்றது.

இம்முறை பேசிய கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள், இலங்கைத் தமிழர்களின் நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் கனடா தொடர்ந்தும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் ஏனைய அமைப்புக்களுடன் செயற்பட்டு வருகிறது என்றும், எந்த நாடும் நடைமுறைப்படுத்தாத வகையில் இலங்கைத் தமிழர்களின் மனித உரிமைகளுக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு கனடா தடை விதித்துள்ளது என்றும் கூறியுள்ளது. இந்தச் செயற்பாடுகள் தொடரும், தமிழ் சமூகத்துடன் கனடா தொடர்ந்தும் பயணிக்கும் என்றும் கூறியிருப்பதே முக்கியமானது.

ஈழத் தமிழ் மக்களுக்கான நீதிக்காக கனடா எடுத்து வரும் நகர்வுகளும் அணுகுமுறைகளும் மிகுந்த நம்பிக்கை அளிப்பவையாகும். இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதை முதன் முதலில் உலகில் ஏற்றுக்கொண்ட நாடு என்ற வகையிலும் கனடா முதன்மை பெறுகிறது. வரும் காலத்தில் இந்த தீர்மானத்திற்கு பல நாடுகள் வரும்.

அதற்கு முன்னுதாரணமான நாடாக கனடா இருப்பது ஆறுதலும் பெருமையும் தரக்கூடியது. அந்த வகையில் கடந்த மே மாதம் நடந்த இனப்படுகொலை நினைவேந்தலில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்று ஏற்றுக் கொண்டிருந்தமை உலக அரங்கில் ஈழத் தமிழர்கள் மீதான இனப்படுகொலை குறித்த அவதானத்தை ஏற்படுத்தியிருந்தது.

அத்துடன் நாங்கள் 14 வருடங்களிற்கு பின்னர் துன்பகரமான விதத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளை நினைவு கூருகின்றோம் என தெரிவித்துள்ள கனடா பிரதமர்,

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இனப்படுகொலையில் ஆயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்கள் இழக்கப்பட்டன, பலர் காணாமல் போனார்கள், காயமடைந்தார்கள், இடம்பெயர்ந்தார்கள். கொல்லப்பட்டவர்கள், உயிர்பிழைத்தவர்கள் மற்றும் அர்த்தமற்ற வன்முறையால் ஏற்பட்ட துயரத்துடன் தொடர்ந்தும் வாழும் அவர்களின் குடும்பத்தவர்கள் குறித்து எங்கள் சிந்தனைகள் உள்ளன என்று அவர் கூறியிருந்தமை முக்கியமானது.

இதேவேளை, கனடாவின் பல சமூகங்களில் நான் சந்தித்த பலர், தமிழ் கனடா பிரஜைகளின் கதைகள், மனித உரிமைகள்- சமாதானம் - ஜனநாயகம் போன்றவற்றை இலகுவாக கருதமுடியாது என்பதை நினைவுபடுத்தி நிற்கின்றன. இதன்காரணமாகவே கடந்த வருடம் மே 18ம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவுதினமாக நாங்கள் அங்கீகரித்தோம் என தெரிவித்துள்ள கனடா பிரதமர் மோதலால் கொல்லப்பட்டவர்கள், உயிர்பிழைத்தவர்கள் உரிமைக்காகவும் இலங்கையில் தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளவர்களிற்காக குரல்கொடுப்பதை கனடா நிறுத்தாது என்றும் அழுத்தம் திருத்தமாக கடந்த மேயில் கூறினார்.

இதேவேளை, கனேடியப் பாராளுமன்றத்தில் இனப்படுகொலை நினைவேந்தல் அங்கீகரிக்கப்பட்டமையும் இதற்கு முந்தைய முக்கிய நகர்வாகவும். அந்த வகையில் ஆண்டு தோறும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை அரச நினைவேந்தல் வாரமாக அனுஸ்டிக்கும் தீர்மானம் கனேடியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அத்துடன் கடந்த சில ஆண்டுகளின் முன்னர் தை மாதம் தமிழ் மரபுரிமைத் திங்களை கொண்டாடவும் கனடா அரசு அங்கீகாரத்தை அளித்தது. தமிழ் மொழியையும், பண்பாட்டையும், கலைகளையும் கொண்டாடும் வண்ணம், வளர்க்கும் வண்ணம், பகிரும் விதமாக தை மாதம் தமிழ் மரபுரிமைத் திங்கள் அனுஷ்டிக்கப்படுகிறது.

ஈழத் தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கையான வடக்கு கிழக்கு இணைந்த சுயநிர்ணய ஆட்சி, இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி போன்ற விடயங்களை நீர்த்துப் போகச் செய்யும் வகையில் அண்மைய காலத்தில் இமாலயப் பிரகடனம் என்ற நிகழ்வு அரங்கேற்றப்பட்டிருந்தது.

இதற்கு உலகத் தமிழர் பேரவை மற்றும் கனேடியத் தமிழ் காங்கிரஸ் போன்ற அமைப்புகள் துணை நின்றிருந்தன. எனினும் குறித்த பிரகடனத்தின் உண்மைத் தன்மை மற்றும் நோக்கம் என்பன மக்கள் மத்தியில் தெளிவு பெற்றிருப்பதுடன் பெரும் எதிர்ப்புக்களும் எழுந்துள்ளன.

குறிப்பாக கனடாவின் இனப்படுகொலைத் தீர்மானத்தால் பதற்றமடைந்த சிறிலங்கா அரசு, அதனை எதிர்கொள்ளவும் சர்வதேச சூழலில் இனப்படுகொலைக்கான நீதிக்கான நகர்வுகளை முடக்கவும் புலம்பெயர் அமைப்புக்களை சிதைக்கவும் இத்தகைய முயற்சியில் ஈடுபட்டிருந்தது.

இந்த நிலையில் தற்போது கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் மீண்டும் ஈழத் தமிழ் மக்களின் நீதிக்காகவும் உரிமைகளுக்காகவும் கொடுத்திருக்கும் குரலென்பது இத்தகைய நகர்வுகளுக்குமான பதிலாகவும் செயலாகவும் அமைந்திருப்பதும் கவனம் கொள்ளத்தக்கது.



# சாதனைப் பெண்ணே...!



மாலினி
கொட்டகலை
(இலங்கை)

விருதுகள் அனைத்தும்
உன்னை கண்டு
வியந்து நிற்கின்றன..

பரிசுகள் எல்லாம்
உன்னை போற்றி
பா இசைக்கின்றன..

வாழ்த்துக் கூட
உனனை கண்டு
வணங்கி வழிவிடுகிறது..

பொன்னாடைகள் ஒவ்வொன்றும்
உன்னை தழுவ
வரம் கேட்கின்றன...

பதக்கங்கள் வரிசையில்
உன்னுருவை பட்டியலிட
புதுப் பரிமாணம் எடுக்கிறது...

சாதனைப் பெண்ணே...
நீ காலத்தின்
தேவை அல்லவா...?

முகத்திரைக்குள் - தன்
முகவரி மறைத்தவள்
இன்று முழு உலகும்
தன் பெயர் பதிக்கிறாள்!

கனவுகள் மெய்ப்படவே
கருவறை வளர்க்கிறாள்!

பாரதி கண்ட
புதுமை பெண்ணையே
பிரசவித்து போகிறாள்!

வள்ளுவனின் பொருளாகி
வாழ்ந்து நிறைகிறாள்!
கம்பன் தந்த சீதையை
கடைக்கண்ணில் சுமக்கிறாள்!
கண்ணகியின் நகலாகி
கண்முன்னே வருகிறாள்!

பெண்ணே - நீ
பேசு பொருள் தான்..

பெற்றோர் மத்தியில்
நீ பேர் சொல்லும்
மகளாகிறாய்..

புகுந்த வீட்டில்
நீ குலம் காக்கும்
குல தெய்வம் ஆகிறாய்..

குழந்தைப் பேற்றில் - நீ
குடும்பம் தளைக்க வந்த
தாய் ஆகிறாய்..

பெண்ணே - நீ
பேசு பொருள் தான்..

நம்பிக்கை எனும்
சிறகுகள் விரித்து,
ஆளுமைகளை தன்
அடையாளங்களாக்கி,
நட்சத்திர மாலை அணிந்து,
நிலவை நெற்றி திலகமிட்டு,
சூரியனை சுடர்விடும்
பேனையாக்கி
உலகுக்கு
புதுச் சேதி சொல்லிவிடு..

பெண்கள்
சாதிக்கவே பிறந்த
பெண் மெய்கள் என.....



# தாய்மொழி தமிழும் தமிழர்களும்

> தமிழரே எழுத்துமொழியை முதன் முதலில் உருவாக்கியதாகவும் தமிழ் வேர்ச் சொற்களில் இருந்தே மற்றைய மொழிகள் உருவானதாகவும் பல அறிஞர்கள், ஆய்வாளர்கள் கூறினாலும் அதை ஏற்றுக்கொள்ளும் நிலையில் எம் தமிழர்கள் பலரே இல்லை. ஏனெனில் அவர்களின் மொழி பற்றிய அறிவே அதற்குக் காரணம்.

ஒரு இனம் உலகில் அவர்கள் பேசும் மொழியை வைத்தே அடையாளப்படுத்தப்படுகிறது. அந்த மொழி அவர்களிடம் இல்லாது அழிந்துவிட்டால் அந்த இனத்தின் பண்பாடும் பழக்கவழக்கங்களும் அழிந்துபோய்விடும்.

உலகின் முதல் மொழி தமிழ் என்று பல மொழியியலாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் தமிழர்கள் பலருக்கு தமது மொழியின் சிறப்போ, அன்றித் தொன்மையோ தெரிவதில்லை.

ஆரியர்கள் வேண்டுமென்றே தமிழ்மொழியில் வடமொழியைப் புகுத்தி சமஸ்கிருதம் என்னும் எழுத்துக்களை உருவாக்கி அது கடவுளின் மொழியென்றும், எல்லோராலும் கற்க முடியாத மொழி என்றும் தமிழர்களைப் பயமுறுத்தி தம்மை உயர்ந்தவர்கள் என்று காட்டிக்கொண்டனர். மன்னர் ஆட்சியின் கீழ் இருந்த மக்கள் எதையும் மறுக்கவோ எதிர்க்கவோ சக்தியற்றுப் போனார்கள்.

உலகின் முதல் நாகரீகமடைந்த இனமாக இருந்த தமிழினம் ஆரியர்களின் வரவின் பின் எதுவுமற்ற இனமாக மாற்றப்பட்டுக்கொண்டிருந்தது. மற்றவர்களுக்கு அஞ்சி வாழும் நிலை தொடர்ந்ததனால் எதிர் கேள்வி கேட்கவோ எம் கருத்துக்களைச் சொல்லவோ முடியாதவர்களாகவே இன்றுவரை தமிழன் இருந்துகொண்டிருப்பது கண்கூடு.

தமிழ் தனித்து இயங்கக்கூடிய ஒரு சிறப்பு மிக்க மொழி. வேறு எந்த மொழியில் இருந்தும் எமக்குச் சொற்களோ எழுத்தோ கடன் வாங்கவேண்டிய தேவை இல்லை. தமிழில் ஓர் எழுத்தே தனிச் சொல்லாக இருக்கும் சிறப்புக் கொண்டது.

தமிழரே எழுத்துமொழியை முதன் முதலில் உருவாக்கியதாகவும் தமிழ் வேர்ச் சொற்களில் இருந்தே மற்றைய மொழிகள் உருவானதாகவும் பல அறிஞர்கள், ஆய்வாளர்கள் கூறினாலும் அதை ஏற்றுக்கொள்ளும் நிலையில் எம் தமிழர்கள் பலரே இல்லை. ஏனெனில் அவர்களின் மொழி பற்றிய அறிவே அதற்குக் காரணம்.



எல்லோருக்கும் மொழியறிவு இருக்க வேண்டிய தேவை இல்லை. ஆனால் மொழிப் பற்று இருக்கவேண்டும் அல்லவா. பலருக்கு அது அறவே இல்லை. அதற்குக் காரணம் தற்கால வாழ்வியல்நிலை, அரசியற்சூழல், உலகப் பொருளாதார யுத்தம் முதலியவற்றோடு இன்னும் பல காரணிகள் மனித வாழ்வில் தாக்கங்களை ஏற்படுத்தியிருப்பதும் காரணம்.

தமிழ் தனித்துவமான மொழி என்பதை தமிழர்கள் நாங்கள் நம்பவேண்டும். அதை அழியாது காக்கவேண்டும் என்ற எண்ணம் வேண்டும். மற்ற மொழியை நாம் கேவலமாக எண்ணத் தேவையில்லை. மற்றைய மொழிகளைக் கற்று அதிலும் தேர்ச்சி பெறுங்கள். அது நல்லதுதான். அதை விட்டு தமிழ் தனித்து இயங்க முடியாத மொழி. மற்றைய மொழிகள் கலந்தால்தான் தமிழ் சிறப்புப் பெறும் என்று எம் செம்மொழி தமிழைக் கேவலப்படுத்தாதீர்கள்.



நவீனன்

# விடுதலை ஒன்றே மூச்சாகிய சுபாஷ் சந்திரபோஸ்

"இந்திய சுதந்திர போராட்ட வரலாற்றில் மறைக்கப்பட்ட வரலாற்று நாயகரான சுபாஷ் சந்திரபோஸின் பிறந்த நாள் (ஜனவரி 23, 1897) நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது."

இயற்கை எனது நண்பன், வாழ்க்கை எனது தத்துவாசிரியன், வரலாறு எனது வழிகாட்டி என தமிழரின் வரலாற்றில் என்றும் மேதகுவாய் விளங்கும் வேலுப்பிள்ளை பிரபாகரன், தனது போராட்ட வாழ்வின் அத்திவாரம் நூல்களால் கட்டியெழுப்பப்பட்டது என்று செவ்வி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந்திய விடுதலைப் போராட்டம் பற்றியும் அதற்கு தங்களையே தற்கொடையாக்கிய சந்திரபோஸ், பகவத்சிங், பாலகங்காதர திலகர் போன்றோரில் தனக்கு ஏற்பட்ட பற்றும் கரிசனையும் இந்த வாசிப்பின் விளைவுகள் தான் என்றும் அச்செவ்வியில் தெரிவித்துள்ளார்.

## ஜாலியன் வாலாபாக் படுகொலை:

மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு வழிகாட்டியாக விளங்கிய சுபாஷ் சந்திர போசை இந்திய சுதந்திர போராட்டத்தில் ஈடுபட வழி வகுத்தது .

1919ல் நடந்த ‘ஜாலியன் வாலாபாக் படுகொலை சம்பவம்’ எனலாம். இந்தியாவின் அம்ரித்சர் நகரில் ஜாலியன் வாலாபாக் என்ற இடத்தில், ஆயுதம் ஏதுமின்றி கூட்டத்தில் பேச்சை கேட்டுக்கொண்டிருந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என பாராமல் ஆங்கில அரசு, ‘ரெஜினால்ட் டையர்’ என்ற ராணுவ அதிகாரியின் தலைமையில் அப்பாவி மக்களைக் கொன்று குவித்தது.

அப்பாவிமக்கள் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதல், வெள்ளையர் ஆட்சி மீது சுபாஷ் சந்திர போஸிற்கு வெறுப்புணர்வை அதிகரித்தது மட்டுமல்லாமல், லண்டனில் தன்னுடைய பணியை துறந்து 1921 ஆம் ஆண்டு இந்தியா திரும்பி வரவும் செய்தது.

## 1958 இனக் கலவர கோர அழிவுகள்:

சுபாஷ் சந்திர போஸை இந்திய சுதந்திர போராட்டத்தில் ஈடுபட வழிவகுத்தது போன்றே மேதகு பிரபாகரனையும் நான்கு வயது சிறுவனாக இருந்த போது நிகழ்ந்த 1958 இனக் கலவரங்கள் தமிழர்க்காக போராட உத்வேகங் கொடுத்தன.

நிராயுதபாணிகளான அப்பாவி தமிழ் மக்களுக்கு எதிராக ஆயுத வலிமையை பிரயோ





கிக்கும் பேரினவாத இயந்திரத்தை ஆயுதப் போராட்டம் மூலமே எதிர்கொள்ள முடியுமென்பதை உணர்ந்தமைக்கு முக்கிய காரணமே 1958 இனக் கலவரங்களின் கோர அழிவுகளாகும். மேதகு பிரபாகரன் நான்கு வயது சிறுவனாக இருந்த போது நிகழ்ந்த 1958 இனக் கலவரங்களின் கோர அழிவுகளைக் கேள்விப்பட்டார். அவருக்கு தமிழ் மக்கள் மீது ஆழ்ந்த பரிவும் அனுதாபமும் ஏற்பட்டது.

எழுபதுகளின் பின் பகுதியில் தரப்படுத்தல் பிரபாகரனை பெரிதும் பாதித்தது. அத்தோடு அவர் வாழ்ந்த வல்வெட்டித்துறை பிரதேசம் அந்தக் காலத்திலேயே இராணுவ அடக்கு முறைகளை எதிர்கொண்டதை சிறுவன் பிரபாகரன் நேரில் கண்டதால் அவருக்கு ஆளும் அரசுக்கு மேல் வெறுப்புணர்ச்சி மேலோங்கியது.

இது பற்றித் தெரிவித்த மேதகு பிரபாகரன், நான் சிறுவயதில் சண்டித்தனமான ஆளும் அல்ல, யாருடனும் சண்டைக்கு போவதுமில்லை. ஆனால் எனது ஊரில் இராணுவத்தின் அடக்குமுறை தன்னில் பாதிப்பை ஏற்படுத்தியது என தெரிவித்திருக்கின்றார்.

இந்திய விடுதலைப்போராட்டம் பற்றியும் அதற்கு தங்களையே தற்கொடையாக்கிய சந்திரபோஸ், பகவத்சிங், பாலகங்காதர திலகர் போன்றோரில் எனக்கு ஏற்பட்ட பற்றும் கரிசனையும் இந்த வாசிப்பின் விளைவுகள்தான். எனது போராட்ட வாழ்வின் அத்திவாரம் இத்தகைய நூல்களால் கட்டியெழுப்பப்பட்டது. அந்நியர் ஆட்சியின் ஆதிக்க அடக்கு முறைகளுக்கெதிரான கொதிப்புணர்வு இந்த வாசிப்புப் பழக்கத்தினாலேயே ஏற்பட்டது என, புலிகளின் தலைவர் பிரபாகரன் ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியில் நினைவு கூர்ந்திருக்கிறார்.

### பிரபாகரன் சுபாஷ் சந்திர போஸ் விடுதலை வீர புருஷர்:

‘நேதாஜி’ என்று இந்திய மக்களால் அழைக்கப்படும் சுபாஷ் சந்திரபோஸ் இந்திய சுதந்திர போராட்டத்தின் உன்னதமான தலைவர். இந்தியா உடனடியாக சுதந்திரம் அடைய வேண்டும், அதற்கு ஒரே வழி ஆயுதப் போர் மட்டுமே என தீர்மானித்தவர். இந்திய தேசிய ராணுவத்தை உருவாக்கி இந்தியாவை ஆட்சிசெய்து கொண்டிருந்த ஆங்கிலேயரை எதிர்த்து தாக்குதல் நடத்தியவரும் அவரே.

இந்திய நாட்டின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்தி இராணுவ ரீதியாக போராடிய மாவீரன் நேதாஜி சுபாஷ் சந்திர போஸை போலவே, சிங்கள பேரினவாத அரசை ஆயுதப் போராட்டம் மூலமே எதிர்கொள்ள முடியுமென்பதை உலகிற்கு உணர்த்தியவர் மேதகு பிரபாகரன் ஆவார்.

தமிழீழத் தேசியத் தலைவர் என உலகத் தமிழர்களால் வர்ணிக்கப்படும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பெருந்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உலகத் தமிழர் வரலாற்றில் தமிழர்களுக்கென விடுதலை நோக்கிய பயணத்தை மேற்கொண்டவர். தனித்தமிழர் மரபு வழி இராணுவத்தை தரை, கடல் என கடந்து வான் படையை நிறுவுவதற்கு பற்றுறுதியோடு செயற்பட்ட வே.பிரபாகரன் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் 1954 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி பிரபாகரன் பிறந்தார்.

சிங்கள அரசை எதிர்த்து தனது பதினாறாவது வயதில் ஏழு நண்பர்களுடன் சேர்ந்து பெயரில்லாத இயக்கத்தை ஆரம்பித்தார். ஆயுதப் போராட்டத்தின் தேவையையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியதாகக் குறிப்பிடுகின்றார். தலைமறைவாக தீவிரவாத நடவடிக்கைகளை மேற்கொண்ட போது இவரும் நண்பர்களும் தேடப்படும் நபர்களானார்கள்.

வே.பிரபாகரனின் சிறுவயதுக்காலம் தமிழ் இனத்துக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்ற பேரவாவுடனும் தீர்க்கமான சிந்தனையுடனும் வளர்ந்தது. 1971 இலிருந்து வீட்டை விட்டு முற்றாக விலகிய பிரபாகரன் தமிழ் மாணவர் பேரவை இணைந்து போராடினார்.

இந்த நிலையில் சிங்கள அரசை எதிர்த்த மேதகு பிரபாகரன் பொலிசாரின் பார்வையிலிருந்து தப்பி 1973 இல் தமிழகம் சென்றார். பிரபாகரனுக்கு ஈழத்துப் பெரியார் (இராசரத்தினம்) அவர்களுடனான சந்திப்பு மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது. புதிய தமிழ்ப்புலிகள் இயக்கத்தை ஆரம்பித்தார்.

1974 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி தமிழாராட்சி மாநாட்டுப் படுகொலை தமிழ் இளைஞர்கள் மத்தியில் விடுதலைப் போராட்டத் தீவிரத்தை வளர்த்தது. 1976 ஆம் ஆண்டு மே மாதம் 5ம் திகதி வவுனியா பூந்தோட்டத்திலுள்ள முகாமில் வைத்து புதிய தமிழ்ப்புலிகள் தமிழீழ விடுதலைப்புலிகளாக பெயர் மாற்றம் பெற்றது.

இழந்த இறைமையை மீட்பதில் மட்டுமல்ல தமிழர்களுக்கென தனிக்கொடியை உருவாக்க பிரபாகரன் முனைந்தார். 1977 ஆம் ஆண்டு புலிகள் இயக்கக் கொடியாக இருந்த புலிக்கொடியிலிருந்த எழுத்துக்கள் நீக்கப்பட்டு 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி மாவீரர் ஆரம்ப நாளன்று தமிழீழ தேசியக் கொடியை பிரபாகரன் பிரகடனப் படுத்தி வானில் ஏற்றினார்.

1983 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலையைத் தொடர்ந்து ஈழப் போராட்டத்தின் தீவிரமாக இளைஞர்கள் குழாம் ஈர்க்கப்பட்ட போதிலும் பிரபாகரன் ஆளணியை பெருக்குவதில் ஆர்வம் காட்டாது, இறுக்கமான கட்டுக்கோப்பான இயக்கமாக தமது அமைப்பை வழிநடத்தினார்.

விடுதலைப்புலிகள் பல்வேறு நெருக்கடிகள், அடக்குமுறைகள், அழுத்தங்கள், சவால்களுக்கு முகம் கொடுத்தும் மரபு வழி





சமரணியாக தமிழ் மக்களுக்கு பலம் சேர்க்கும் அணியாக விரிவாக்கம் பெறுவதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் கொள்கைப் பற்று, விடுதலை வேட்கை, தன்னம்பிக்கை, துணிச்சல், புலனாய்வுத்திறன், எதிரிகளையும் நண்பர்களையும் பிரித்தறியும் ஆற்றல், போராளிகளை அரவணைத்துச் செல்லும் பரிவு போன்றன முக்கிய காரணங்களாகும்.

சாதாரண புலி உறுப்பினர் ஒருவர் கூட தலைவரைப் பற்றி உரையாற்றும் போது மெய் சிலிர்ப்பதை தனிமனித வழிபாடாக சிலர் விமர்சித்தாலும் பிரபாகரன் என்ற ஆளுமையே வடக்கு கிழக்கு என்று விரிந்து பரந்து இளைஞர் அணியாக தமிழர் தேசம் ஒருமைப்பட காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

பல உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் வேலுப்பிள்ளை பிரபாகரனை திசைதிருப்ப, விலைக்கு வாங்க அல்லது விடுதலைப் புலிகளை பிளவுபடுத்த பலவீனப்படுத்த, மக்களிடமிருந்து அன்னியப்படுத்த மேற்கொண்ட பகீரத பிரயத்தனங்களைக் கடந்து விடுதலைப் புலிகள் எவருக்கும் அடி பணியாது வழிநடத்தி வந்தவர்.

## பிரிட்டிசாருக்கு எதிராக மக்களை திரட்டிய நேதாஜி :

இந்திய விடுதலைக்காக பிரித்தானிய அரசுக்கு எதிராக மக்களை ஒன்று திரட்டுகிறார் என கூறி 1940 ஆம் ஆண்டு, ஆங்கிலேய அரசு நேதாஜியைக் கைது செய்து சிறையில் அடைத்தது. இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்த மும்முரமான காலகட்டம் அது, பாரத தேசத்தை ஆண்டுகொண்டிருந்த ஆங்கில அரசை எதிர்க்க இது தான் சரியான தருணம் என கருதிய நேதாஜி அவர்கள், ஜனவரி 17, 1941 ஆம் ஆண்டு மாறுவேடம் அணிந்து சிறையிலிருந்து தப்பினார். அங்கிருந்து பெஷாவர் வழியாக காபூல் அடைந்த அவர், பின்னர் கைபர் கணவாய் வழியாக ஆப்கானிஸ்தானை அடைந்தார். ரஷ்யா வழியாக இத்தாலிக்கு செல்லவேண்டும் என நினைத்த நேதாஜி இந்துகுஷ் கணவாய் வழியாக ரஷ்யாவை அடைந்தார்.

1941 ஆம் ஆண்டு 'சுதந்திர இந்திய மையம்' என்ற அமைப்பைத் தொடங்கிய நேதாஜி அவர்கள், சுதந்திர இந்திய வானொலியை பெர்லினில் இருந்து தொடங்கியதோடு மட்டுமல்லாமல், இந்திய விடுதலைப் போராட்டத்தை மையப்படுத்தியும் உலகப்போர் பற்றிய செய்திகளையும் இதில் ஒளிபரப்பினார்.

பிறகு, ஜெர்மன் அயலுறவு துறை அமைச்சர் 'வான் ரிப்பன் டிராபின்' உதவியுடன்சிங்கப்பூரில் 'ராஷ் பிகாரி போஸ்' தலைமையில் தொடங்கப்பட்டு செயல்படாமல் கிடந்த இந்திய தேசிய ராணுவத்திற்கு தீவிர பயிற்சி அளித்து அதனை தலைமையேற்றும் நடத்தினார்.

## இந்திய தேசிய ராணுவம்: ( INA )

1943 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடந்த மாநாட்டில் தேசிய கொடியை ஏற்றி, சுதந்திர அரசின் பிரகடனத்தை வெளியிட்டார். இதன் பிறகு, ஜப்பான், ஜெர்மனி மற்றும் இத்தாலி போன்ற நாடுகளின் ஆதரவுடன், பர்மாவில் இருந்தபடியே இந்திய தேசிய ராணுவப்படையை உருவாக்கி 1944ல் ஆங்கிலேயரை எதிர்த்தார். ஆனால் இந்திய தேசியப் படை, பல காரணங்களால் தோல்வியைத் தழுவி பின்வாங்கியது.

ஆகஸ்ட் 15, 1945 ஆம் ஆண்டு நேதாஜி வானொலி மூலம் வீரர்களுக்கு இந்த தற்காலிக தோல்வியால் மனச்சோர்வு அடைந்துவிடாதீர்கள்! நம்பிக்கையுடன் இருங்கள், இந்தியாவை நிரந்தரமாக அடிமைத்தளத்தில் கட்டி வைக்கும் ஆற்றல் இந்த உலகில் எந்த சக்திக்கும் இல்லை, ஜெய் ஹிந்த் என அப்பொழுது உரையாற்றினார்.

அன்று அவர் குறிப்பிட்ட படியே சரியாக இரண்டு ஆண்டுகளில், அதாவது ஆகஸ்ட் 15, 1947 ஆம் ஆண்டு இந்தியா விடுதலைப் பெற்றது.

## போஸ் மரணம் குறித்த சர்ச்சை:

ஆகஸ்ட் 18, 1945 ஆம் ஆண்டு நேதாஜி பயணம் செய்த விமானம் பர்மோசா தீவுக்கு அருகே விபத்துக்குள்ளாகி அவர் இறந்துவிட்டார் என ஜப்பானிய வானொலி அறிவித்தது. இந்த செய்தி, இந்திய மக்களை நிலைக்குலைய செய்தது.

நேதாஜி இறந்துவிட்டார் என்பதை பலரும் நம்பவில்லை. இறுதிவரை அவருடைய மரணம் மர்மமாகவே இருந்து விட்டது. எனக்கு ரத்தம் கொடுங்கள், உங்களுக்கு சுதந்திரத்தை பெற்று தருகிறேன் எனகூறிய இந்திய புரட்சிநாயகன் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பாரதநாட்டை அடிமைபடுத்தி வைத்திருந்த ஆங்கிலேயரை எதிர்த்து, இராணுவ ரீதியாக போராடிய ஈடிணையற்ற மாவீரன் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

இந்தியாவின் முதல் ராணுவத்தை கட்டமைத்து இந்தியர்களின் ஆயுதக் கையாளுமையை உலகறிய செய்தவர். மாபெரும் சாம்ராஜ்யத்தை அசைத்துப் பார்க்கும் அவர் முயற்சி சற்று பின்னடைவை சந்தித்தாலும், அவரது வீரம் என்றென்றும் நினைவு கூறத்தக்கது. சுதந்திர இந்தியாவிற்காக தன்னையே அர்ப்பணித்துகொண்ட நேதாஜி அவர்கள், ஒவ்வொரு சுதந்திர போராட்ட வீரர்கள் நெஞ்சிலும் இன்றளவும் நீங்கா இடம் பெற்றுள்ளார்.

## ஈழத்தமிழர் வரலாற்றில் திருப்புமுனை:

ஈழத்தமிழர் வரலாற்றில் முக்கிய திருப்புமுனைச் சக்தியான விடுதலைப் புலிகளின் பெருந்தலைவர் பிரபாகரன் இயற்கை எனது நண்பன், வாழ்க்கை எனது தத்துவாசிரியன், வரலாறு எனது வழிகாட்டி என்ற தத்துவார்த்த ரீதியாக வாழ்ந்தவர்.

அவரது அரசியல் இலட்சியத்தினை ஆழமாகப் பார்த்தால் அவரை ஒரு நாட்டுப்பற்றுடைய தேசியவாதியாகவே கருத முடியும். தமிழ் மக்களை இன ரீதியாக அழித்தொழிக்க வேண்டுமென்ற சிங்கள இனவாத ஒடுக்குமுறையை முறியடிக்க வேண்டுமென்பதில் பிரபாகரன் திடசங்கற்பம் பூண்டு நின்றார். அந்த திடசங்கற்பத்திலிருந்து பிறந்தது தான் பிரபாகரனின் 'தமிழ்த் தேசியப்பற்று' என்று புலிகள் தலைவரைப் பற்றி சுதந்திர வேட்கை நூலில் திருமதி அடேல் பாலசிங்கம் குறிப்பிட்டுள்ளார்.



# எம். ஜி. ஆர். பிறந்தநாள் சிறப்பு பதிவு

இங்கே தமிழ் திரையுலகம் எம் ஜி ஆர் என்ற நல்ல மனிதனின் இரும்புப் பிடியில் முப்பது வருடங்கள் சிக்கியிருந்தது.

1925 இல் நடிக்க வந்த எம்.ஜி.ஆர், நடிப்பு துறையில் ஒரு இடம் பிடிக்க 22 வருடங்கள் போராடினார். 1947 இல் திரை கதாநாயகன். 1958ல் வசூல் சக்ரவர்த்தியாக உருவெடுத்தபோது அவருக்கு வயது 41.

1960 களில் எம்.ஜி.ஆர் தனக்கான இடத்தை பிடித்தார். உதவிகள், துரோகங்கள், ஏமாற்றங்கள், ஏற்ற இறக்கங்கள் என 35 வருடங்கள் போராடி பெற்ற இடம்.

இடத்தை பிடித்ததும் அதுவரை ஒதுக்கியவர்களை ஓரத்தில் வைத்தார். உதவியவர்களை மதித்தார். மறுத்தவர்களை மண்டியிட செய்தார். பட்டியலில் இயக்குனர் ஸ்ரீதர், பாடகர் டி.எம்.சௌந்தரராஜன், நடிகர்கள் அசோகன், சந்திரபாபு, காதல் இளவரசன், சூப்பர் ஸ்டார் என்று பலர்.

அந்த காலங்களில் மேற்படி விஷயங்களுக்கு யாரும் சிபிஐ விசாரணை கேட்கவில்லை. மாறாக 'வாத்தியார்' தனது வகுப்பை எப்படி கட்டுக்கோப்பாக வைத்திருக்கிறார்என்று ரசிகர்கள் புளகாங்கிதம் அடைந்தார்கள். அவரது கீர்த்தி மேலும் கூடியது.

எம்.ஜி.ஆரின் புகழ் என்பது தெளிவாக கட்டமைக்கப்பட்ட ஒரு பிம்பம். ஒவ்வொரு



அங்குலமாக அவரே செதுக்கியது. பிரஷாந்த் கிஷோர் படித்த பள்ளியில் எம்.ஜி.ஆர் பெரிய வாத்தியார்உயிருடன் இருந்தவரை அசைக்கமுடியாத பிரபலமாக இருந்ததற்கு அவரது 'டகால்ட்டி' வேலைகள் காரணமாக இருந்திருக்கலாம்.

ஆனால் இறந்தபின்னரும் நினைவில் நிற்கும் வகையில் எம்.ஜி.ஆரின் புகழ் நிலை நாட்டப்பட்டிருக்கிறது. சமீபத்தில் இறந்த பெருந்தலைகளை மறந்த அரசியல் களம், 90ஸ் கிட்ஸ்கள் முகம்கூட பார்த்திராத இந்த மனிதனை இன்னும் பேசுகிறது. வணங்குகிறது.

எவரையும் சந்தேக கண்ணோடு பார்க்கும் எம்.ஜி.ஆரின் குண நலன்கள், வறுமையில் இளமையை தொலைத்த அனைத்து ஏழை சிறுவர்களுக்கும் பொதுவானவை. எம்.ஜி.ஆர் பிறந்த இரண்டாவது வயதில் தந்தையை இழந்தார். வறுமையில் வீழ்ந்த குடும்பத்தில் வாழ்ந்தார்.

சின்னஞ்சிறு வயதில் நாடக சபாவில் தனது தமையனுடன் சேர்க்கப்பட்டார் ராமச்சந்தர். 'அன்னையை பிரியமாட்டேன், மேலே படிக்கவேண்டும்' என்று கதறி அழுதவரை, 'உணவுடன் தங்குமிடம் கிடைக்கும்' என்று ஆறுதல் சொல்லி சபாவில் சேர்ந்துவிட்டார் அவரது தாயார்.

எந்த சபாவிலும் முன்னணி நடிகர்களுக்குத்தான் முதல் பந்தி.

உப நடிகர்களுக்கு தனி பந்திதான். 'தனி' பந்தியில் மீந்தியதை சாப்பிடும்போது ஒருவேளை அவர் தீர்மானித்திருக்கலாம் 'எப்படியாவது முதல் இடத்தை பிடிக்க வேண்டும், யாருக்கும் அதை விட்டுத்தரக் கூடாது' என்று.

மக்கள் திலகமாக உருமாறிய பின்னாளில் அவரது வீட்டிற்கு வரும் அனைவரையும் அவரே 'சாப்பிட்டீர்களா?' என்று விசாரிப்பார் சமபந்தியில் சாப்பிட வைப்பார் என்று பலரும் நினைவு கூறுகிறார்கள்.

எட்டு வயதில் உணவிற்காக தனது அம்மாவையும், கல்வியையும் பிரிய நேர்ந்தது அவர் வாழ்வின் முதல் துயரம். அது 50 வருடங்கள் கழித்து அவர் மாநிலத்தின் முதல்வரான போது மேம்படுத்தப்பட்ட மதிய உணவுத்திட்டமாக உருவெடுத்தது.

கேள்விக்குரிய நிர்வாகத்திறனுடன் நடத்தப்பட்ட அதிமுக ஆட்சியை அசைக்க முடியாத ஆட்சியாக மாற்றிய திட்டம் அது.38 வருடங்களுக்கு முன்னால் இதே தேதியில் (18.07.1982) திருச்சியில் திட்டத்தை துவங்கி வைத்து பேசுகையில் இரு





வேளை உணவுக்கு தன்னை பிரிய நேர்ந்த தனது அன்னையை ஒரு வேளை நினைத்திருக்கலாம்..

‘வேலைக்குப்போகும் ஏழை தாய்மார்கள் இனி தனது மகன் அங்கே வயிறார சாப்பிட்டுக் கொண்டிருப்பான் சத்தான உணவு அவனுக்கு கிடைக்கிறது என்று நிம்மதியுடன் அவர்கள் வேலையை தொடரலாம்’

திரையின் உச்ச நட்சத்திரமாக இருந்தபோது எம்.ஆர்.ராதாவால் சுடப்பட்டு பிழைத்து வந்தார் எம்.ஜி.ஆர். கழுத்தில் கட்டுடன் வெளிவந்த அவரது போட்டோ அவர் ரசிகர்களை வெறி கொள்ள செய்தது. ஒரு தேர்தலையே வெற்றி கொள்ள வைத்தது.

ஆனால் எம்.ஜி.ஆரால் பழைய குரலில் பேசமுடியவில்லை. எதிர்தரப்பினரால் பெரும் கேலிக் குள்ளானார். இருந்தாலும் அவருக் கேயுரிய பிடிவாதத்துடன் கடைசி வரை சொந்த குரலில் பேசி நடித் தார்.

‘ஊமையன்’ என்று கேலி செய்த குரல்கள் தன்னை காயப்படுத்தி யதாக அவர் என்றுமே காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் அவரது மரணத்திற்கு பின் வெளியான உயிலில் தனது சொத்தில், ராமாவ ரத்தில் 6.5 ஏக்கர், ஊமை குழந்தை களுக்கான பள்ளிக்கென்று எழுதி வைத்திருந்தார்.எம்.ஜி.ஆர். புகழ் இன்றும் நிலைத்திருக்க என்ன காரணம்?தனக்கென ஒரு இடத்தை உருவாக்க நடத்திய நீண்ட தொரு போராட்டம்.கிடைத்த இடத்தை தக்க வைக்க செய்த தந்திரங்கள், தளராத முயற்சிகள்.

ஏற்பட்ட காயங்களை இறுதி நாள் வரை மறக்காத குணம்.தான் பட்ட கஷ்டத்துக்கு, சமூகத்தை பழிவாங்க முற்படாமல், அந்த சிரமங்களை ஏழை மக்கள் படாமலிருக்க முயற்சி மேற்கொண்ட பொன்மனம்.

கோடிகள் சம்பாதித்து, பாதியை தர்மத் துக்கு எழுதி, மீதியையும் தனது குடும் பத்துக்கு நிரந்தரமாக தராமல், அவர்கள் காலத்துக்கு பின்னர் கட்சிக்கும் பொது வுக்கும் வருமாறு உயிலெழுத ஒரு மனம் வேண்டும். சென்னை நகருக்குள் ஏக்கர் கணக்கில் வாங்கிய தனது சொத்துக்களை எழுதிவைத்த ஒரு தலைவனை இனி பார்க்க முடியுமா?’ என்று அவர் ரசிகர்கள் கேட்கிறார்கள்.

தான் கட்டமைத்த பிம்பமானாலும் அதா கவே மாறிப்போனார் எம்.ஜி.ஆர்.

தமிழகமும் அந்த புகழ் பிம்பத்திலிருந்து வெளிவர விரும்பாமல் அதை நிரந்தரமாக் கிவிட்டது.

**நன்றி: ஆர்.முத்துகுமாரின் ‘வாத்தியார்’ நூல், எம்.ஜி.ஆர் எழுதிய ‘நான் ஏன் பிறந்தேன்’ நூல்.**



# மலரன்னை

## மலரன்னை: தமிழர் ஈழ இலக்கிய தாய்! அமுதவிழா காணும் போராளித் தாய்!

போராளி எழுத்தாளரும் மாவீரருமான கப்டன் மலரவனின் தாயார் அற்புதராணி காசிலிங்கம் மலரன்னையின் இருநூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் பல்வேறு பத்திரிகைகள், வானொலிகள், சஞ்சிகைகளில் இலங்கை மற்றும் பிற நாடுகளில் பிரசுரமாகியுள்ளது.

### மாவீரன் கப்டன் மலரவனின் தாயார் :

சில சிறுகதைகள் சர்வதேச வெளியீடுகளில் மீள்பதிவும் செய்யப்பட்டுள்ளன. நாற்பதிற்கும் மேற்பட்ட வானொலி நாடகங்கள் ஒலிபரப்பாகி மிகுந்த வரவேற்பு பெற்றுள்ளன. 'கனவுகள் நனவாகும்' என்ற தொடர்நாடகம் (நாற்பத்தி மூன்று அங்கங்கள் ) ஒலிபரப்பாகி மிகுந்த வரவேற்பை பெற்றிருந்தது.பல வானொலி நிகழ்ச்சிகளையும் எழுதியிருக்கிறார்.




இவர் எழுதிய பத்து ஆங்கிலக் கவிதைகள் Hot spring என்ற ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரமாகியிருக்கிறது. இவரது நாற்பதிற்கும் மேற்பட்ட ஆக்கங்கள் பல்வேறு போட்டிகளில் பரிசு பெற்றிருக்கின்றன.

தற்போது அமுதவிழா காணும் அவரின் 'மலரன்னையின் வாழ்வும் படைப்பும்' நூல் வெளியீடு நிகழ்வு 08.01.2024 திங்கட்கிழமை மாலை 3.30 மணியளவில் திருநெல்வேலியில் உள்ள ராஜா கிறீம்கவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் ஜீவநதி ஏற்பாட்டில் இடம்பெற்றது.

### அமுதவிழா காணும் மலரன்னை:

எழுத்தாளரும், சமூக செயற்பாட்டாளருமான கோகிலா மகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் வரவேற்புரையினை இரா. குலசிங்கம் அவர்களும் வெளியீட்டுரையினை விரிவுரையாளர் புலோலியூர் வேல்நந்தகுமார் அவர்களும் நிகழ்த்தினர்.

மலரன்னையின் சிறுகதைகள் பற்றி எழுத்தாளர் பிரேமினியும், மலரன்னையின் நாவல்கள் என்கிற தலைப்பில் விரிவுரையாளர் அஜந்தகுமாரும் சிற்றுரை நிகழ்த்தினர்.



தொடர்ந்து நூல் வெளியீடு இடம்பெற்றது. மலரன்னையின் வாழ்வும் படைப்பும் நூலினை ஜீவநதி ஆசிரியர் பரணீதரன் வெளியிட்டு வைக்க மலரன்னை அவர்கள் நூலினை பெற்றுக் கொண்டார்கள்.

### பல விருது பெற்ற மலரன்னை:

1950 களில் இலங்கை வானொலியின் தமிழ் ஒலிபரப்பின் சிறுவர் நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய மலரன்னை மூத்த புகழ் பெற்ற எழுத்தாளர் கச்சாய் இரத்தினத்தின் மகள் ஆவார். 1993 ஆம் ஆண்டில் இவரது முதலாவது



சிறுகதை வெளியாகியது.அன்றிலிருந்து தொடர்ச்சியாக எழுதி வருபவர்.

சர்வதேச அளவில் நடை பெற்ற இலக்கிய போட்டிகளில் நான்கு முறை சிறுகதை, நாடக எழுத்துருவுக்காக பரிசு பெற்றுள்ளார். சிரித்திரன், மல்லிகை சிறுகதைப் போட்டிகளிலும் அகில இலங்கை ரீதியில் பரிசு பெற்றுள்ளார். ‘பாலைவனத்துப் புஸ்பங்கள்’ என்ற நாவல் தேசிய கலாசாரப் பேரவையின் தேர்வில் இரண்டாம் பரிசுபெற்றது.

அத்துடன் இலக்கிய விவரணம் எழுதுவதிற்கான பிரிவு போட்டியிலும் முதற்பரிசு பெற்றிருக்கிறார். ஓவியம், ஒளிப்படம் முதலியவற்றிலும் ஈடுபாடு உடைய இவர் தையல்கலையில் சிறந்து விளங்கினார். இவரது சில மொழி பெயர்ப்பு கட்டுரைகளும் , சில கவிதைகளும் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளது. இலக்கியப்பங்களிப்புக்காக கலைமாமணி, கலைஞானச்சுடர் விருதுகளை பெற்றுள்ளார்.

## தமிழர் ஈழ இலக்கிய தாய் விருது:

அமுத விழா நாயகிக்கான விழாவில் கௌரவிப்பினை ஜீவநதி




பதிப்பகத்தின் உரிமையாளரும் ஜீவநதி இதழின் ஆசிரியருமான கலாமணி பரணீதரன் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். தொடர்ந்து இந்துநாகரீகத் துறை தலைவரான சுகந்தினி முரளீதரன் அவர்கள் மாலையணிவிப்பு செய்து கௌரவித்தார்.

ஜீவநதி பதிப்பகத்தின் ஏற்பாட்டிலான தமிழர் ஈழ இலக்கிய தாய் என்கிற கௌரவ விருதினை அம்மாவுக்கு மூத்த எழுத்தாளர் அ. ஜேசுராசா வழங்கி வைத்தார். நூல் பற்றிய கருத்துரையினை எழுத்தாளர் மயூரரூபனும் நிகழ்த்தினர். அதனை தொடர்ந்து ஊரவர்கள், வாசகர்கள், நலன்விரும்பிகள் என பலரும் பொன்னாடை போர்த்தி அவரை வாழ்த்தி கௌரவம் வழங்கினர். இறுதியாக ஏற்புரையினையும் நன்றியுரையினையும் மலரன்னை அவர்கள் நிகழ்த்தினார்.

## ஈழத்தின் போற்றுதற்குரிய படைப்புகள்:

மலரன்னையின் நூல்களில் வேர் பதிக்கும் விழுதுகள் (16 சிறுகதைகளின் தொகுப்பு) 2015, கீறல் ( 23 சிறுகதைகளின் தொகுப்பு) 2016, மறையாத சூரியன் (நாவல்) 2016 முத்து மீரான் விருது (2017),மௌனத்தின் சிறகுகள்(நாவல்)2017,அனலிடைப் புழு ( 25 சிறுகதைகளின் தொகுப்பு) 2017, மலைச்சாரலின் தூவல் (நாவல்)2018, காகிதப்படகு (மூன்று குறுநாவல்களின் தொகுப்பு) 2018, அப்பாவின் தேட்டம் (25 சிறுகதைகளின் தொகுப்பு) 2019 ஆகிய படைப்புக்கள் ஈழத்து இலக்கியப் பெருவெளியில் முக்கியமானவையாகும்.

மலரன்னை ஒரு ஹோமியோபதி மருத்துவர் என்பதும் ஹோமியோபதி, சுதேச மருத்துவத்திற்காக பிரித்தானியாவில் இயங்கும் மாற்று மருத்துவத்திற்காக அமைப்பு ஒன்றிலும் அங்கத்தவராக இருந்திருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவரது பாலைவனத்துப் புஸ்பங்கள் ( நாவல்) 2019, உயிர் சுமந்த கூடு ( 18 சிறுகதைகளின் தொகுப்பு) 2020, அசை (21 சிறுகதைகளின் தொகுப்பு) 2021, ஒரு பிடி சாம்பல் (16 சிறுகதைகளின் தொகுப்பு) 2021 போன்ற படைப்புக்கள் ஈழத்து இலக்கியத்தின் போற்றுதற்குரிய படைப்புக்களாகும்.

## தமிழன்னை பெற்ற மலரவன்:

தமிழன்னை பெற்ற மலரவன் என்னும் ஒரு போராளியை மலரன்னை 23/11/1992 களத்தில் இழந்தாலும், அந்தப் போராளியை, படைப்பாளியை சுமந்த தாயின் கரங்கள் போராட்டம் தொடர்பான பல பதிவுகளை தொடர்ந்து எழுதியது.

தனது பிள்ளைக்கும் ‘வீரமகனுக்கு தாயின் கவிதை அஞ்சலி’ என்ற தலைப்பில் கவிதைகளைக் கண்ணீரோடு வரைந்தார் வீரத்தாய் மலரன்னை. அக்கவிதையின் இறுதி வரிகளில்

*மண்ணில் உதிர்த்திட்ட மைந்தனே! -*
*இன்று( விண்ணில் உயர்ந்திட்டாய்*
*மா வீரனாய்( விதையாய்*
*வீழ்ந்திட்டாய் மண்ணிலே - இன்று*
*(கதையாகி விட்டதே உன் சரிதை.*
*இருபதே வருடங்கள் வாழ்ந்தாலும்(*
*அர்த்தமாய் வாழ்ந்திட்டாய்*
*வல்லமையால் - இந்த( மண்ணின்*
*விடியலே உன் கனவு - நீ*
*(விண்ணிலிருந்து நோக்குவாய்*
*மலரும் தமிழீழமதை!*

தாய் மண்ணிற்காக போராடி, களப்பலியாகிய போராளி எழுத்தாளரும் மாவீரருமான கப்டன் மலரவனின் தாயார் மலரன்னையின் படைப்புக்கள் ஈழத்து இலக்கிய வரலாற்றுக்கு மேலும் பெருமை சேர்க்கின்றன.





ஐங்கரன்

# யாழில் மாட்டு வண்டி சவாரி



யாழ்ப்பாணத்தில் மாட்டு வண்டி சவாரி யாழ் முற்றவெளி மைதானத்தில் 1960 களின் பிற்பகுதியில் இருந்து தைப் பொங்கல் பண்டிகை காலத்தில் சிறப்பாக நடைபெற்று வந்ததுள்ளதை பலரும் அறிவர். பின்னர் போர்க் கால சூழ்நிலமைகளால் யாழில் மாட்டுவண்டிச் சவாரி தடைப்பட்டுப் போனது.

## தைப்பொங்கலும் மாட்டு வண்டிச் சவாரியும்:

தைப்பொங்கல் தமிழர் திருநாளாகும். உழவர் திருநாள் என்றும் இதை அழைப்பர். 'தை பிறந்தால் வழி பிறக்கும்'என்று சொல்வதற்கமைய தையே தமிழரின் புத்தாண்டு என்றும் கூறிடுவர்.

தைப்பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல், அல்லது பட்டிப் பொங்கல் என்று சொல்லி, உழவர்களுக்குத் துணையாக இருந்த மாடுகளுக்குப் பொங்கிப்படைப்பது தமிழர் வழமை.

தை பிறந்த பின்னரே உழவரின் வாழ்வும் சிறப்படையும். உழவர்களின் வாழ்வியல் திறமைகளை வெளிக்கொணரும் விளையாட்டே மாட்டு வண்டிச்சவாரியாகும். இலங்கையில் தமிழர்களுக்கே உரித்தான பாரம்பரியம் மிக்க விளையாட்டுக்களில் ஒன்றாக மாட்டு வண்டிச் சவாரி விளங்குகின்றது.

மாட்டு வண்டிச்சவாரி ஆரம்ப காலம் தொடக்கம் தற்காலப் பகுதி வரையில் சிறந்ததொரு வீர விளையாட்டாகவும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவராலும் விரும்பிப் இரசிக்கப்படும் விளையாட்டாகவும் காணப்படுகின்றது.

## காலங்காலமான வண்டி சவாரி:

காலங்காலமாக இலங்கையில் மாட்டுவண்டிச் சவாரி ஆனது பல்வேறு இடங்களில் நடைபெற்று வந்ததுள்ளது. ஒவ்வொரு வருடமும் நடைபெறும் தைப்பொங்கல் மற்றும் சித்திரை - புத்தாண்டு நாட்களில் மிகச் சிறப்பாக யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்று வந்ததை நாம் சிறுவர்களாக இருக்கையில் கண்டு களித்துள்ளோம்.

மாட்டு வண்டிச் சவாரி தமிழர்களின் பண்பாட்டை ஒரு புறம் அடையாளங் காட்டி நிற்க, மறுபுறம் விவசாயத்தின்



முதுகெலும்பான தரமான காளைகளை வளர்க்கும் கால்நடை வளர்ப்பின் முக்கிய உந்து சக்தியாகவும் அது காணப்படுகின்றது. சவாரிக்கான மாடுகள் அவற்றின் பிறப்பிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன. இது ஒரு வீர விளையாட்டு என்ற காரணத்தினால் சவாரி வண்டியில் பூட்டப்படும் காளை மாடுகளும் கம்பீரமும், வீரமும் மிக்கவையாகவே தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

அக்காலத்தில் தினகரன், ஈழநாடு பத்திரிகை நிறுவனங்கள் போருக்கு முன்னைய காலப்பகுதியில் வருடா வருடம் யாழ்ப்பாணம் முற்றவெளிப் பகுதியில் சவாரிப் போட்டி நடத்துவதை வழக்கமாக கொண்டிருந்தன.

## ஏறு தழுவுதல் - மாட்டு வண்டிச் சவாரி:

ஏறு தழுவுதல் தமிழ் நாட்டின் வீர விளையாட்டு என்றால் ஈழத் தமிழர்களின் வீர விளையாட்டாக மாட்டு வண்டிச் சவாரி அமைகிறது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது. முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு. திருகோணமலை ஆக்கிய இடங்களிலும் மாட்டு வண்டிச் சவாரி காலம் காலமாக தொடர்வதை நாம் அவதானிக்கலாம்.

அக்காலப்பகுதிகளில் யாழ்ப்பாணம் முழுவதும் பிரபலமான சவாரி ஓட்டுநர்களாக அளவெட்டி சிவஞானம், சவாரிக்கார வன்னித்தம்பி, பண்டத்தரிப்பு தங்கராஜா, சவாரிக்கார சபாபதி, சிதம்பரப்பிள்ளை, கரவெட்டி இளையாம்பி போன்றவர்கள் காணப்பட்டனர்.

## ‘சவாரித்தம்பர் இளையதம்பி’யின் ஆளுமை:

வருடா வருடம் பொங்கல் காலத்தில் மாட்டு வண்டி சவாரி நிகழ்வை சிறப்பாக நடைபெற்று வருவதை யாழ்ப்பாண மக்கள் பலரும் கண்டு களித்து வந்துள்ளனர். இந்த நிகழ்வை முன்னின்று நடத்துவது சுன்னாகத்தை சேர்ந்த பிரபல மாட்டு வண்டி ஓட்டுநரான ‘சவாரித் தம்பர்’ என அழைக்கப்படும் மறைந்த இ.இளையதம்பி என்பவரே.

இவர் இலங்கை அரசாங்க மரக் கூட்டுத்தாபன அதிகாரியாக இருந்த போதிலும் பல்வேறு சமூக சமுதாய பற்றுடன் தனது முழுமையான பங்களிப்பை தமிழ் மக்களுக்கு ஆற்றி வந்திருந்தார்.

இவருடைய பங்களிப்பு ஈழத்து மாட்டுவண்டிச் சவாரி வரலாற்றில் மிகப் பெரியது என்றே கணிப்பிடலாம். இந்த மாட்டு வண்டி சவாரி விழா யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் சித்திரைப் புத்தாண்டு காலத்திலும் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளது.



அக்காலங்களில் பல்வேறு இடங்களிலும் இருந்து மாட்டு வண்டிகள் இவ்விழாவில் கலந்து கொள்ளும். ஆயினும் முக்கியமாக சுன்னாகம், சூராவத்தை, கொற்றாவத்தை, பண்டத்தரிப்பு மற்றும் முல்லைத் தீவு, கிளிநொச்சியில் இருந்தும் மாட்டு வண்டிகளும் இவ்விழாவில் பங்கேற்றுக் கொள்ளும்.

## தமிழரின் பாரம்பரிய விளையாட்டு:

மாட்டுவண்டிச் சவாரியானது ஒரு இடத்தில் நடக்கப் போகின்றது என்றால், அது அனைவருக்கும்; பெரும்பாலும் ஊடகங்கள் வாயிலாகத் தெரியப்படுத்தப் படுகின்றது. ஆரம்பகாலங்களில் இந்தப்போட்டியானது நீர்வேலி சவாரித்திடல், முல்லைத்தீவு மாவட்டம் வவுனிக்குளம், முழங்காவில், கிளிநொச்சி, மன்னார், கரவெட்டி, ஆவரங்கால் போன்ற இடங்களில் பெரும்பாலும் நடைபெறுவது வழக்கமாக இருந்தது.

யாழில் மாட்டு வண்டி சவாரி விழாக்களை சிறப்பாக முன்னின்று நடத்தும் சவாரித்தம்பர் என்று அழைக்கப்படும் இளையதம்பி ஆற்றிய சேவை பலருக்குத் தெரியாமல் இருந்து வந்துள்ளது. தனது சிறப்பான பணியை மாட்டுவண்டி பாரம்பரியத்திற்காக ஆற்றியுள்ளார்.

அவருடைய பணியைப் பற்றி ஒரு நூல் எழுத வேண்டிய காலம் எனக்கு இருந்த போதும், அவருடைய சேவைகளை பற்றிய தகவல்களும், பதிவுகள் எல்லாம் போர்க் காலத்தில் அழிந்துவிட்டன. சுன்னாகத்தில் இருந்து அவர் ஆற்றிய பணியை நாங்கள் எப்போதுமே மறந்து விடமுடியாது.

மாட்டு வண்டி சவாரி யாழ். முற்ற வெளியில் நடக்கும்போது பெருந்திரளான மக்கள் பல்வேறு இடங்களிலும் இருந்து வந்து பார்த்து ரசிப்பார்கள். அக்காலங்களில் 1960 களிலும் 70 களிலும்யாழ்ப்பாணத்தில் மிகச் சிறப்பான விழாக்களாக மாட்டு வண்டி சவாரியே முதன்மை வகித்தது.

## முன்னோடியாக இருந்த சவாரித்தம்பர்:

இப்போது நடைபெற்று வரும் மாட்டு வண்டி சவாரி நிகழ்வுகளுக்கு முன்னோடியாக இருந்த ‘சவாரித்தம்பர் இளையதம்பி’ 1991 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார். ஈழத்தில் தமிழர்களுக்கே உரித்தான பாரம்பரியம் மிக்க விளையாட்டுக்களில் ஒன்றான மாட்டு வண்டிச் சவாரியில் அவரின் பங்கு அளப்பரியது.

மாட்டு வண்டிச் சவாரியானது ஆரம்ப காலம் தொடக்கம் தற்காலம் வரையில் சிறந்ததொரு வீர விளையாட்டாகவும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவராலும் விரும்பிப் இரசிக்கப்படும் விளையாட்டாகவும் காணப்படுகின்றது. பாரம்பரிய தமிழர் கலாச்சாரத்தை பேணிப் பாதுகாத்ததில் சுன்னாகம் ‘சவாரித்தம்பர் இளையதம்பி’ அவர்களும் தனது அளப்பரிய பங்களிப்பை ஆற்றியுள்ளார்.



வெற்றிபெற்ற காளைகளுடன்
போட்டி அமைப்பாளர் இ. இளையதம்பி



# ஹைக்கூ கவிதைகள்

வீட்டின் பெயர் ‘கருணை இல்லம்’
விரட்டப்பட்டான்
வயோதிப பிச்சைக்காரன்.

வெட்டுப்பட்டது வெங்காயம்.
அழுதன கண்கள்.

கல்யாண மாலை கட்டுகிறாள்
வயிற்றுப் பிழைப்புக்காக.
முதிர் கன்னி.

அமாவாசையிலும்
பௌர்ணமி வெளிச்சம்,
அருகில் என்னவள்.

கறுப்பை ஈடுசெய்ய
கொண்டு வந்தாள் மணப்பெண்
ஒரு கலர் ரீவி.

அத்தனை கோபம் தெரிகிறது
அதிரும் பறையில்.
இளைய தலைமுறை.

அடகு வைக்க முடியாமல்
தவிக்கும் அவள்.
காது ஓட்டையில் வேப்பங்குச்சி.

மின்சார அடுப்பில் பிடி சாம்பலாகியது
நிலச்சுவான்தார்
பிணம்.

அப்பாவை அறைந்தது சாரல்
திருப்பி சண்டையிட்டாள்
செல்லமகள்.

சுற்றிலும் வெள்ளக்காடு,
நடுவே அக்கினி.
பசித்த வயிறு.



உழைக்காமலே வியர்வையா?
புல்லின் மீது
பனித்துளி.

சமத்துவக் கூட்டம்,
கும்பல் கும்பலாக உட்கார்ந்தார்கள்.
சாதிவாரியாக.

கனிகளைத் தேடிய
ஒரு நெடும் பயணம்.
வேர்கள்.

இருட்டியதும் வீடு நோக்கி
விரைந்தாள்.
கண்ணடித்தது
தெரு விளக்கு.

பூக்களுக்குப் போட்டியாக
வண்ணக் குவியல்
பட்டாம்பூச்சிகள்.

**கார்த்திகை**



# புத்தரின் மனைவி

புத்தராவது சுலபம். ஆனால் புத்தரின் மனைவியாய் இருப்பது? புத்தர் ஞானம் பெற்றதும் தன் மனைவி, குழந்தையை பார்க்க போகிறார்.

மனைவி கேட்கிறாள்: என்னை விட்டுப் போனது பரவா யில்லை. ஆனால் என்னிடம் சொல்லி விட்டு போயிருக்க லாமே! நான் ஒன்றும் உங்களைத் தடுத்திருக்க மாட்டேன். ஆனால் நீங்கள் என்னை நம்பவில்லை என்ற நினைப்பே என்னை இத்தனைக் காலமும் மிக நோகடித்து விட்டது. ஏன் என்னை காயப்படுத்தினீர்கள்?

புத்தர் அவளிடம் மன்னிப்பு கேட்டு விட்டு தான் பயந்தது அவளை நினைத்து அல்ல. தன்னை நினைத்துத்தான் என்கிறார். மனைவி, மகனின் முகம் பார்த்தால் தான் உறுதி குலைந்து அங்கேயே தங்கி விடுவேன் என தான் பயந்த தாய் கூறுகிறார்.

அடுத்து அவர் மனைவி மிகச்செறிவான ஒரு கேள்வி கேட்கிறாள்.

அது இது தான்: நீங்கள் இந்த அரண்மனையை விட்டு போகாமல் இங்கேயே தங்கி இருந்தால் ஞானம் பெற்றி ருக்க முடியாதா?

புத்தர் சொல்கிறார்: தாராளமாக. அதற்கு நான் மலை, காடு, ஆசிரமங்கள் எல்லாம் தேடி அலைய வேண்டிய தில்லை தான். ஆனால் இங்கிருந்து ஓடிப் போகும் போது நான் அதை அறிந்திருக்கவில்லை. உண்மையில் எங்கிருந் தாலும் எனக்கு இந்த ஞானம் கிடைத்திருக்கும். இடம் பொருட்டே அல்ல

புத்தனின் வாழ்க்கையை போற்றும் யாரும் அவர் மனைவி யசோதராவைப் பற்றிப் பேசுவது இல்லை. அவள் பட்ட துயரங்களை நினைத்துப் பார்ப்பதும் இல்லை.

புத்தர் போனது போல் யசோதரா ஒரு நள்ளிரவில் வெளி யேறி இருந்தால்..? இந்த உலகம் ஒப்புக் கொண்டிரு க்குமா...? ஓடுகாலி என்றிருக்கும்.

சரி! புத்தர் போன பின்பும்தான் என்ன செய்தது...? அவளை வாழாவெட்டி என்றது.

அப்படி ஒன்றும் வயதாகிவிடாத அழகு மங்கை யசோதரா. ஒற்றைக் குழந்தை ராகுலன். விடுமா ஆண்வர்க்கம்.? சாதாரணமான பெண் தனித்து விட்டாள் என்றாலே அலை பாய்வார்கள். இவளுக்கோ உரிமையாய் ஒரு ராஜ்ஜியம் வேறு.

இவள் எவ்வளவு போராடியிருப்பாள்.? புத்தர் போன தும் தன் தலையை மழித்துக் கொண்டாள். தன் ஆடை அலங்கோலமாக்கிக் கொண்டாள். ஒற்றைப் பிள்ளையின் ‘அப்பா எங்கே? ’ எனும் கேள்விக்கு பதில் சொல்ல முடி யாமலேயே பதின்வயது வரை வளர்க்கப் போராடினாள்.

எல்லாவற்றையும் துறந்து, எத்தொல்லையும் இல்லா மல் துறவியானான் புத்தன். எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு, எல்லாத் துயரையும் அனுபவித்தபடி துறவி யாய் வாழ்ந்தாள் யசோதரா.

எது கடினம்? இப்போது சொல்லுங்கள்.. யார் துறவி இப்போது?





# தேனீ

## தேனீக்கள் பற்றி தெரிந்துக்கொள்வோம். தேனீ அழிந்தால் தேசம் அழியும்.

தேனீக்கள் மட்டும் இந்த மண்ணில் இருந்து மறைந்துவிட்டால், மனிதன் வாழ்வதற்கு நான்கு ஆண்டுகளுக்கு மேல் மிச்சம் இருக்காது! என்று சொல்லியிருக்கிறார் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.

இது இனிக்கும் செய்தியல்ல....!தேனீ:உலகின் மிக சுவாரஸ்யமான, நுணுக்கமான ஒரு உயிரினம்.அந்தத் தேனீக்களைப் பற்றி ஆச்சரியமான மற்றும் அதிர்ச்சியான விஷயத்தைத்தெரிந்துகொள்ளலாமா?



முதலில்... ஆச்சரியம்.

இத்தனூண்டு சிறியதாக இருக்கும் தேனீதான் உலகின் மிகச் சிறந்த மகரந்தச் சேர்க்கையாளர்.

தென்னை, வாழை, பூசணி, ஆப்பிள், பீச் போன்ற பல பழ வகைகள்.. காபி, ஏலக்காய், பருத்தி போன்ற செடிகள்.. மற்றும் உணவு தானியங்கள் எனப் பல கோடி மகரந்தச் சேர்க்கைகளுக்குக் காரணமாக இருக்கும் தேனீக்கள்தான், உலகின் 80 சதவிகித உணவுப் பொருள்களின் பெருக்கத்துக்கும் காரணம்.

தேனீயின் தகவல் பரிமாற்ற முறை, ஸ்கைப், வாட்ஸ்அப் முறைகளை விடத் துல்லியமானது.யானை, ஆமைகளுக்கு ஞாபகசக்தி அதிகம் என்போம். ஆனால், அவற்றைவிடவும் கூர்மையான ஞாபகசக்தி கொண்டவை தேனீக்கள்.இதுபோல இன்னும் பல ஆச்சரியங்கள் அந்தச் சிறிய உடம்பில் இருக்கின்றன.

ஆனால், அதிர்ச்சி தரும் விஷயம்..அந்தத் தேனீக்கள் இப்போது 'அழிந்துவரும் உயிரினங்கள்' பட்டியலில் இடம்பிடித்திருக்கின்றன.

ஆம்... 'உலகை உலுக்கும் செய்தி'என்றால், நிச்சயம் இதுதான்.ஒட்டுமொத்த மக்கள் தொகையாலும் பூமிக்கு விளையாத நன்மை, ஒரே ஒரு தேனீயால் விளையும்.அந்த அளவுக்குத் தேனீயின் ஒவ்வொரு சிறகசைப்பும் பூமிப் பந்தில் பசுமைப் போர்வையைப் போர்த்துகிறது.

தேனீக்களின் 'வாழ்க்கை முறை ' பற்றி தெரிந்து கொண்டால் தான், அது காடுகளின் பெருக்கத்துக்கு எப்பேர்ப்பட்ட நன்மை விளைவிக்கிறது என்பது புரியும்.

தேனீக்களின் வாழ்வியல் குணங்களைப் பற்றி கேட்டதும், சுவாரஸ்யமாகப் பட்டியலிட்டார் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பூச்சிகள் துறையைச் சேர்ந்த டாக்டர் எம்.ஆர்.ஸ்ரீனிவாசன்.

உலகத்தில் ஐந்து வகை தேனீக்கள் உண்டு.மலைத் தேனீ, இந்தியத் தேனீ, கொம்புத்தேனீ, இத்தாலியன் தேனீ, கொடுக்கில்லாத் தேனீ.

இதில் இந்திய, இத்தாலிய மற்றும் கொடுக்கில்லாத் தேனீக்களைத் தான் மனிதர்கள்வளர்ப்பார்கள்.மற்ற தேனீக்கள் தானாகவே காட்டில் வளரும்.



ஒரு குடும்பத்தில் ஒரு ராணித் தேனீ, சில நூறு ஆண் தேனீக்கள், பல்லாயிரம் பணித் தேனீக்கள் (பெண்கள்) இருக்கும்.இதில் ஆண் தேனீக்களுக்கு 90 நாள்களும், பணித் தேனீக்களுக்கு 70 நாள்களும், ராணித் தேனீக்கு இரண்டு வருடங்களும் ஆயுள் இருக்கும்.

ராணித் தேனீக்களுக்கு முட்டையிடுவது மட்டும்தான் வேலை. ஆண் தேனீக்கு, ராணியோடு புணர்வதும் தேன் கூட்டைப் பாதுகாப்பதும் கடமை.

மற்ற எல்லா வேலைகளும் பணித் தேனீக்கள் பொறுப்பு.



உணவுச் சேகரிப்பு, தேன்கூடு கட்டுவது, தேனைப் பக்குவப்படுத்துவது, கூட்டைச் சுத்தமாகப் பராமரிப்பது என்று எல்லா வேலைகளையும் பணித் தேனீக்கள்தான் கவனிக்கும்.

தேனீக்களின் பொறியியல் அறிவு அபாரமானது.தேன் கூட்டை அறுகோண வடிவத்தில் கட்டும். ஏன் என்றால்.. அப்பொழுதுதான் ஒரு சென்ட்டிமீட்டர் இடத்தைக்கூட வீணாக்காமல் முழுதாகப் பயன்படுத்த முடியும்.

ஆண் தேனீகளுக்குப் பெரிய அறுகோண அறை, பணித் தேனீக்களுக்குச் சிறிய அறுகோண அறை வடிவத்தில் கூடு கட்டிவிட்டு, ராணித் தேனீக்கு சிலிண்டர் வடிவில் அறை கட்டும்.

கூட்டின் கட்டுமானம் திருப்தியாக இருந்தால் மட்டுமே, ராணித் தேனீ அதில் முட்டையிடும்.பூக்களின் மகரந்தம், மதுரம்... இரண்டும்தான் தேனீக்களின் உணவு.

அப்போதைய பசிக்கு அப்போதே சாப்பிட்டுவிடும்.அப்புறம் ஏன் தேன் சேகரிக்கிறது?குளிர் காலங்கள், பூ பூக்காத காலங்களில் உணவுத் தட்டுப்பாட்டைச் சமாளிக்கத்தான் தேன் சேகரிக்கிறது.

தேனீக்கள் தேன் சேகரித்துப் பதப்படுத்துவதுதான் உலகின் சிறந்த உணவுப் பதப்படுத்தும் தொழில்நுட்பம்.தேன் தேடிச் செல்லும் பணித் தேனீக்கள், பூக்களின் மதுரத்தை உறிஞ்சி தன் உடலில் இருக்கும் 'தேன் பை'யில் சேகரித்துக்கொள்ளும்.

அந்த மதுரம் முழுவதும் செரிக்காமல், தேனீயின் வயிற்றில் இருக்கும் நொதிகளுடன் சேர்ந்து திரவமாக மாறிவிடும்.கூட்டுக்குத் திரும்பி வரும் தேனீக்கள், கூட்டின் வாசலில் காத்திருக்கும் தேனீக்களிடம் அந்தத் திரவத்தை ஒப்படைக்கும்.

அதற்காக ஏப்பமிட்டு, ஏப்பமிட்டு தேன் பையில் இருந்து திரவத்தை வெளியில் கொண்டுவந்து எதிர் தேனீயின் வாயில் கொட்டும்.ஒரு தேனீ இப்படி 50 முறை கக்கினால்தான், ஒரு துளி தேன் சேரும்.

கூட்டைப் பராமரிக்கும் தேனீக்கள் அந்தத் திரவத்தைக் கூட்டின் ஓர் ஓரத்தில் இருக்கும் தேனடையில் கக்கி, அதில் 'இன்வர்டேஸ்' எனும் நொதியைச் சேர்க்கும்.பிறகு அந்தத் திரவத்தில் இருந்து நீர்த்தன்மை வற்றிப் போவதற்காக தன் இறகை ஆட்டி ஆட்டி ஆவியாக்கும்.பிறகு தேனைப் பாதுகாக்க ஒருவகை மெழுகைப் பூசிவைக்கும்.

இத்தனை நடைமுறைகளுக்குப் பிறகுதான் நாம் சுவைக்கும் தேன் உருவாகும்.தேன் எடுப்பவர்கள் கொஞ்சம் தேனை தேனிக்களுக்கு எனக் கூட்டில் விட்டுத்தான் எடுப்பார்கள்.

அதுதான் தேன் சேகரிக்கும் தர்மம். இந்த வேலை நடக்கும்போது ராணித் தேனீ அதை வேடிக்கை மட்டுமே பார்க்கும். இனப்பெருக்க காலத்தில் மட்டும்தான் அதற்கு வேலை வரும். அந்தச் சமயத்தில் ராணித் தேனீ வேகமாக உயரத்துக்குப் பறக்கும்.அதை எந்த ஆண் தேனீ துரத்திப் பிடிக்கிறதோ, அதோடுதான் இணை சேரும் ராணி.புணர்ச்சி முடிந்தவுடன் ஆண் இறந்துவிடும்.

அதன் பிறகு ராணித் தேனீ முட்டையிட, முட்டையில் இருந்து வரும் தேனீக்களைப் பணித் தேனீக்கள்தான் வளர்ப்புத் தாயாக வளர்க்கும். தேன் சேகரிப்பதற்கான தகவல்களை தேனீக்கள் பகிர்ந்துகொள்ளும் முறை அட்டகாசமானது.

உணவுத் தேவை ஏற்படும்போது 'சாரணர்கள்' ஆக சில தேனீக்கள் முன்னே சென்று பூக்கள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்துவிட்டு கூட்டுக்குத் திரும்பும். கூட்டில் உள்ள மற்ற பணித் தேனீக்களுக்கு சாரணத் தேனீக்கள், தாங்கள் கண்டுபிடித்த தோட்டம் அல்லது சோலை எந்தத் திசையில் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்பதை நடனம் ஆடித் தெரிவிக்கும்.

இதில் இரண்டு வித நடனங்கள் உள்ளன.





வட்ட நடனம் மற்றும் வாலாட்டு நடனம்.வட்ட நடனத்தில் வட்டமிட்டு வட்டமிட்டு பூக்கள் இருக்கும் தொலைவை மட்டும் குறிக்கும்.வாலாட்டு நடனத்தில் உயரப் பறந்து வாலை ஆட்டினால், சூரியன் இருக்கும் அதே திசையில் உணவு உள்ளது என்றும், கீழே பறந்து வாலை ஆட்டினால், சூரியனுக்கு நேரெதிர் திசையில் தோட்டம் உள்ளது என்றும் அர்த்தம்.

வாலை வேகமாக ஆட்டினால், சோலை அருகில் உள்ளது என்றும், மெதுவாக ஆட்டினால், தொலைவில் உள்ளது என்றும் அர்த்தம்.

சூரியன், சோலையின் திசை, தங்கள் கூட்டின் இருப்பிடம்... இந்த மூன்றையும் சம்பந்தப்படுத்தி நடன அசைவுகள் இருக்கும்.



இந்த நுட்பமான நடன ரகசியத்தைக் கண்டுபிடித்த ஆஸ்திரிய ஸ்காலர் கார்ல்வான் ஃப்ரிஸ்-க்கு நோபல் பரிசு கொடுத்தார்கள்.தேன் சேகரிக்கும் போது தேனீக்களின் காலில் ஒட்டிக்கொள்ளும் பூக்களின் மகரந்தம், அடுத்தடுத்து பூக்களின் மேல் உட்காரும்போது, விதவிதமான கூட்டணியுடன் பரவும்.

இதுதான் காடுகளின், சோலைகளின் பரவலுக்குக்காரணம்.தேனீக்களை அதிகம் காடுகளுக்குள் தான் பார்க்க முடியும்.காரணம், தேனீக்கள் இருக்கிற இடத்திலேயே இயற்கையாகவே அடர்ந்த காடுகள் உருவாகிவிடும்!‘

‘அழியும் உயிரினம் பட்டியலில் இடம் பிடிக்கும் அளவுக்கு தேனீக்களுக்கு என்ன ஆபத்து?’

‘அமெரிக்கா, ஐரோப்பா போன்ற மேற்கத்திய நாடுகளில் தேனீக்கள் அழிந்துவரும் உயிரினங்கள். கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் உலகின் மூன்றில் ஒரு பங்கு தேனீக்கள் அழிந்துவிட்டன. அதாவது, தேனீக்களின் அழிவு சதவிகிதம் 42 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது.இன்னும் இந்தியாவில் தேனீக்களுக்கு அந்த அளவுக்குப் பெரிய அபாயம் ஏற்படவில்லை.ஆனால், கூடிய சீக்கிரமே அந்த நிலைமை வரலாம்.

தேனீக்களின் இந்தப் பேரழிவுக்குக் காரணம்,Colony Collapse Disorder - சுருக்கமாக... இஇஈ.அதாவது கூட்டில் இருந்து உணவு சேகரிக்கச் சென்ற பணித் தேனீக்கள் கொத்துக் கொத்தாகக்காணாமல் போய் விடும்.

ராணி மட்டும் கூட்டில் இருக்கும். பணித் தேனீக்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து ஒரு கட்டத்தில் இல்லாமலேயே போய்விட்டால், ராணித் தேனீ என்ன செய்வதெனத் தெரியாமல் குழம்பி, சீக்கிரமே இறந்துவிடும்.இல்லையெனில் வேறுகூடு தேடிப் போய்விடும்.

பணித் தேனீக்கள் இப்படித் தொலைந்து போவதற்குப் பல காரணங்கள் உண்டு. அதில் முக்கியமானது... செயற்கை உரம், பூச்சிக்கொல்லி, மரபணு மாற்றப்பட்ட பயிர்கள்.செயற்கை உரத்தில் உள்ள நியோநிக்டினாய்ட்ஸ் எனப்படும் வேதிப்பொருள், தேனீக்களின் நரம்பு மண்டலத்தைப் பாதித்து அவற்றின் நினைவுத்திறனைமழுங்கடித்து விடும்.

இதனால் கூட்டுக்குத் திரும்பும் வழி மறந்து போய் பறந்துபோய் அலைந்து திரிந்து அவை இறந்துவிடும்.மரபணு மாற்றப்பட்ட உணவுப் பயிர்களின் விதைகளை ‘டெர்மினேட்டர் சீட்ஸ்’ என்பார்கள்.

அதாவது, அந்தப் பயிர்கள் ‘விதை தானியத்தை’ உருவாக்காது.மலட்டு விதைகளைத் தான் உருவாக்கும்.அப்படியான மரபணு மாற்றப்பட்ட பயிர்களின் மகரந்தத்தில் உள்ள புரோட்டீன் தேனீக்களிடம் செரிமானக் கோளாறுகளை உண்டாக்கி, ஒரு கட்டத்தில் தேனீக்களைக் கொன்றேவிடும்.

இப்படி விவசாயத்தில் ‘வணிக லாபத்துக்காக’ மனிதன் செய்த பல மாற்றங்கள் தேனீக்களை அழிக்கின்றன.ஐரோப்பிய நாடுகளில் கடந்த ஐந்து வருடங்களாக விவசாய உற்பத்தி பெருமளவு குறைந்து வருவதற்குக் காரணம் தேனீக்களின் இறப்பு எனத் தெரியவந்தது.

அதனால், அங்கு செயற்கை உரம், மரபணு மாற்றப்பட்ட விதைகள் போன்றவற்றைத் தடை செய்துவிட்டனர்.வளர்ப்புத் தேனீக்களைப் பிடித்து வந்து தங்கள் வயல்களில் பறக்கவிட்டு மகரந்தச்சேர்க்கையை உண்டாக்க முயற்சிக்கிறார்கள்.

பல லட்சம் தேனீக்களை அழிக்கும் சுயநலமிக்க மனிதனால், ஒரே ஒரு தேனீயைக்கூட உருவாக்க முடியாது.



# மனிதம்

மனித நேயம்
மறந்த பூமியாக
மாறியது ஏனோ?
விஞ்ஞான வளர்ச்சியின்
விந்தையில் மாறியதொன்றா?

கைக்குள் உலகம் என - கை
தொலைபேசியினுள்
வாழ்கையை தொலைத்து
வசந்தங்கள் இழந்து
வாழ்ந்திடும் உலகம் இது!

அண்டை அயலில் நடப்பது
எதுவென அறிந்திட முடியா
அன்னிய உலகில்
அவரவருக்கு பிடித்தது போல்
ஒரு வாழ்க்கைப் பாதை

பக்கத்து வீட்டில் பாலகன்
பசியால் கதறினாலும்
உதவி கேட்டு ஒருவர்
உயிரே போக அலறினாலும்
யாருக்கும் கேட்பதில்லை
இப்போது!

கை தொலைபேசியிலும்
காதில் பொருத்திய
கேட்கும் கருவியிலும்
தனை மறந்த உலகில்
தனித்து இருப்பதனால்தான்
உலகத்தின் மொழிகள்
கேட்பதில்லையோ!

விஞ்ஞான வளர்ச்சி - நம்
வாழ்க்கையில் முக்கியமே.
தனை மறந்து
இணையத் தளமே கதியென
இயங்குதல் தவறன்றோ..

அன்று.
கையடக்க தொலைபேசி
காணாத காலத்தில்,
மாலை வேளைகளில்
கூடி குலாவி குதூகலித்து
ஊர் நிகழ்வுகள் யாவும்
உரைத்து மகிழ்ந்தனர்

ஒருவருக்கு துயரமென்றால்.
ஒன்றாக கூடி
ஒற்றுமையாக அவர்
வாழ்வை
உயர்த்தும் ஏணியாக
ஊரவர்கள் இருந்தார்கள்!

திருமணமோ, மரணமோ
ஒன்றாக நின்று
இன்பத்திலும்
துன்பத்திலும்
துணையாக உறவாடி
மனித நேயத்தை
மாண்புறக் காத்தனர்

கலியுக காலத்தில்
கண்டதையும் பார்த்து
கண்கெட்டுப் போய்
மனித நேயமற்ற
இழி செயல்களில்
ஈடுபட்டு
இளைய சமுகமே இன்று
சீரழிந்து போகிறது!

காமுகராய்,
காடையராய்,
போதைக்கு
அடிமையாகி
சீரழிந்த வாழ்கையில்
சிறைப்படுவோர்
ஆயிரம் பேர்!

ஈழத்தின் இளையோரே!!
உங்கள் விழி மூடி
ஒரு கணம் சிந்தியுங்கள்!
உங்களுக்காய்
உயிர்தந்து விழிமூடிய
இளையவரை
நினையுங்கள்!

ஒன்றுக்கும் உதவாத
பழக்கங்களை
குழி தோண்டி புதைத்து,
மனித நேயம் போற்றும்
மானிடராய் வாழ்ந்திடுங்கள்!!

**பவானி**

# தாய்



தனது வாழ்க்கையின் உச்சகட்ட உயர்விற்கு சென்று விட்ட ஒருவன் தனது தாயைப் பார்த்து கேட்டான்.

அம்மா! என்னைப் பெற்றெடுத்து, பாசத்தைக் கொட்டி, பல தியாகங்களை செய்து, காலமெல்லாம் என் மீது பாசத்தை பொழிந்து ஆளாக்கிய உனக்கு ஏதாவது செய்ய வேண்டுமென நினைக்கிறேன். அம்மா உனக்கு என்ன வேண்டும், நான் என்ன செய்ய வேண்டும்? என்றான் மகன்.

தாய் வியப்புடன் மகனைப் பார்த்தாள்.

அதைப் பற்றி இப்ப என்ன? என்னுடைய கடமையைத் தானே செய்தேன் அதை எப்படி நீ எனக்கு திருப்பி கொடுக்க முடியும்? நீ விரும்பினாலும், எவ்வாறு திருப்பி கொடுக்க முடியும்?

இருந்தாலும் தன் தாய் செய்த தியாகங்களுக்கு ஏதாவது செய்தாக வெண்டுமென நினைத்தான். தொடர்ந்து அம்மாவிடம் கேட்டுக் கொண்டே இருந்தான். அம்மாவும் மறுத்தலித்து வந்தாள். ஒரு கட்டத்தில் மகனின் ஆசையை பூர்த்தி செய்ய நினைத்த தாய், மகனிடம்,

சரி..நீ தொடர்ந்து கேட்பதால், ஒன்று சொல்கிறேன். அதை நிறைவேற்றினால் போதும். என்றாள்.

மகனுக்கு ஒரே சந்தோஷம்.

அம்மா என்ன வேண்டும்? சொல்லுங்கள். என்றான் மகன்.

ஒன்றுமில்லை மகனே! நீ குழந்தையாக இருந்த போது எனது அருகில் படுத்து உறங்கினாயே, அதைப் போல இன்று ஒரு நாளைக்கு என்னுடன் படுத்து உறங்கு எனக் கூறினாள் தாய்.

அம்மா! நீ கேட்பது, வித்தியாசமாக உள்ளது. இருப்பினும் அது உனக்கு மகிழ்ச்சியை தருமென்றால் அதை இன்றே நிறைவேற்றுகிறேன் என்று அன்றிரவு, தனது தாயின் படுக்கையில், தாயுடன் படுத்துக் கொண்டான்.

தனது மகன் தூங்கி விட்டான் என்று அறிந்த தாய், எழுந்து சென்று ஒரு வாளியில் நீரை நிரப்பி கொண்டு வந்து, தனது மகன் படுத்திருந்த இடத்தில் ஒரு குவளை தண்ணீரை வீசி நனைத்தாள். தூக்கத்தில் தான் படுத்திருக்கும் இடம் ஈரமாக இருப்பதை உணர்ந்த மகன், தூக்கத்திலேயே படுக்கை





யின் மறு பக்கத்திற்கு உருண்டு சென்று படுத்தான்.

அங்கே சென்று மகன் தூங்கியதும், இன்னொரு குவளை நீரை எடுத்து அவன் படுத்திருந்த இடத்தில் நீரை வீசி ஈரப்படுத்தினாள். மீண்டும் படுக்கை ஈரமாக இருப்பதை உணர்ந்த மகன், தூக்கத்திலேயே படுக்கையின் கால்புறம் இடம் நோக்கி நகர முயன்றான். சிறிது நேரத்தில் அந்த இடமும் ஈரமாக இருப்பதை உணர்ந்த மகன், தூக்கம் கலையவே, எழுந்து பார்க்கும் போது, தனது தாய் தண்ணீர் குவளையுடன் இருப்பதைப் பார்த்து, கோபமாக,

என்ன அம்மா செய்கிறாய்? தூங்க கூட விட மாட்டேன் என்கிறாய்? ஈரத்தில் தூங்க வேண்டுமென எப்படி எதிர் பார்க்கிறாய்? எனக் கேட்டான் மகன்.

அப்போது தாய் அமைதியாக சொன்னாள்:

மகனே..! அம்மாவின் தியாகத்துக்கு ஈடுகட்ட, திருப்பி ஏதாவது செய்ய வேண்டுமென நீ நினைக்கிறாய். நீ குழந்தையாக இருக்கும் போது இரவு நேரங்களில் அடிக்கடி படுக்கையை நனைத்து விடுவாய். உடனே நான் எழுந்து உனக்கு உடையை மாற்றி ஈரமில்லாத இடத்தில் படுக்க வைத்து விட்டு, நான் ஈரமான இடத்தில் படுத்துக் கொள்வேன். முடியுமானால், உன்னால் இந்த ஈரமான படுக்கையில் ஒரு இரவு தூங்க முடியுமா? என்றாள் தாய்.

மகன் திகைத்து நின்றான்.

இது உன்னால் முடியுமென்றால், தாயின் தியாகத்திற்கு ஈடு கொடுத்ததாக எடுத்துக் கொள்கிறேன் என்றாள் தாய்.

நண்பர்களே, உலகில் எல்லா கடன்களையும் அடைத்து விட முடியும், ஒன்றைத் தவிர. அதுதான் தாயின் தியாகம். தாயின் தியாகத்திற்கு, எந்த ஒரு மகனாலும் ஈடு செய்ய முடியாது.

தாய் காட்டிய அரவணைப்பு, அன்பு, காலநேரம் பாராது, தனது மகனை சீராட்டி, உணவூட்டி. வளர்த்து, தனது தேவைகளை தியாகம் செய்து தனது மகனே உலகம் என்று அவனது வளர்ச்சியில் ஆனந்தம் கொண்டு, தனது குழந்தைக்காக தன்னையே வழங்கிய தாயிற்கு நீ எதை திருப்பி கொடுத்து ஈடுகட்ட முடியும்? நீ அவளுடைய சதையும், ரத்தமுமாகும், தாயில்லாமல் நான் இல்லை என்பதை நினைவில் கொள், ஏனென்றால் உனது தாய் இதை என்றுமே மறந்ததில்லை.

எவ்வளவுதான் வயதானாலும், தாயின் நினைவு நமது வாழ்வில் தினமும் ஒரு அங்கம் தான். அன்பே சிவம் என்கிறார்கள் பெரியோர்கள். அன்பே தாய் என்பது தான் நிதர்சமான உண்மை.

நினைத்தபோதெல்லாம் இறைவனைக் காணத்தான், இறைவன் தாயைப் படைத்தானோ?





# அத்தி மரம்

நிலத்தடி நீர்மட்டம் அதிகமாக கீழே சென்று விட்டது. அப்படி என்றால் நமக்கு குடிநீருக்கு வழி என்ன?

இதற்கு ஒரே வழி, அத்திமரங்கள் தான். அத்திமரங்கள் நிலத்தடி நீரை மேலே கொண்டு வரும் ஆற்றல் உடையவை.

அத்திமரங்கள் பற்றிய விடயங்களை தேடிப் படித்தால் உங்களுக்கே புரியும். ஆதலால் அத்திமரங்கள் வளர்ப்பதனால் நமது குடிநீர் பிரச்சினை தீருவதோடு, அனைத்து உயிர்களுக்கும் குடிநீர் கிடைக்கும்.

இதை ஏதோ சாதாரணமாக நினைக்காமல் அனைவருக்கும் தெரியபடுத்துங்கள்.

அதன்மூலம் அத்திமரங்களை வளர்க்க பேராதரவு கிடைக்கும். வரண்ட பூமியும் சோலைவனமாக நாளை மாறும்.

எதிர்வரும் தலைமுறைக்கு நாம் செய்யும் பேருதவி இதுவாகத்தான் இருக்கும்.



# வனவல்

## கொற்றவை

## அங்கம்: 16



நல்ல பொறுத்த நேரத்தில் வாகன நெரிசலில் அகப்பட்டு விட்டான் ஆனந்தன். தொலைபேசியின் இடைவிடாத கிணு கிணுப்பு ஒருவித கோபத்தை ஏற்படுத்தியது அவனுக்கு.

யார் இது.? இடைவெளி விடாமல் அடிச்சுக்கொண்டே இருக்கினம்'

வாகனத்தைத் தந்தபோதே மண்டிக்காரர் சொல்லியிருந் தார்.

''இஞ்ச பாரும் தம்பி...! உம்மில நம்பிக்கை இருக்கிறதால தான் இந்த வேலையையும் உமக்குத் தாறன். உமக்கும் காசுக் கஸ்டம் கொஞ்சம் குறையுமல்லோ....? மற்றபடி... கனகாலம் நீர் வாகனம் ஓடேல்லை எண்டு தெரிஞ்சும் நம்பித் தாறன்... நீர்தான் கவனமா ஓடவேணும்.... பேந்து, என்னை வில்லங் கங்களுக்கை இழுத்து விட்டிடாதையும்.....''

வாகன நெரிசலோடு அங்கங்கு காவற்துறையினரும் நிற் பது தெரிந்தது.

'ஏதேனும் பிரச்சனையோ தெரியேல்லை.... இப்ப ஃபோன் எடுத்துக் கதைக்க, அவங்கள் நிப்பாட்டி விசாரிச்சு ஏதும் வம்பு வந்தாலும் வேண்டாம்.... பிறகு ஆர் அடிச்சது எண்டு பாப்பம்....' எண்ணிக் கொண்டான் ஆனந்தன்.

மருந்தகத்தை அடைந்தபோது பிந்திவிட்டது.

''இதுதான் கொண்டுவாற நேரமோ...? சனங்கள் வந்து வந்து திரும்பிப் போகுதுகள்...'' எரிச்சலுடன் கேட்டார் மனேஜர்.

''திடீரென்று ரோட்டு இறுகீட்டுது ஏதோ பிரச்சனை போல.... மன்னிச்சுக் கொள்ளுங்கோ....''

திரும்ப வாகனத்தில் ஏறும்போதுதான் ஃபோன் ஞாபகம் வந்தது. வெண்ணிலாதான் அடித்திருந்தாள். அதுவும் ஏழெட் டுத் தடவைகள். மனம் துணுக்குற்றது. ஏதும் பிரச்சனையாக இருக்குமோ..? வெண்ணிலாவுக்கு ஃபோன் எடுத்த கையு டன் பதறிப்போய் எடுத்தாள் அவள்.

''அப்பா...! அம்மாவுக்கு சுத்தமா முடியேல்லை... மூச்சும் எடுக்க கஸ்டப்படுறா... உடனை ஆஸ்பத்திரிக்கு போக வேணும்... வாறீங்களோ.? அப்பா..! கெதியா வாங்கோ!''

கடைகளுக்கு சாமான்கள் இறக்கும் வேலை நேரம் வந்து விட்டது என்ற அவசரத்தில் இருந்தான் ஆனந்தன். மண்டிக் காரரை அழைத்து விசயத்தை சொன்னான். 'அடிக்கடி லீவு போடுறீர்' என்று ஏதாவது கோபமாக சொல்லிவிடுவாரோ என்று படபடப்பாக இருந்தது. ஆனால், அவர் உடனேயே வீட்டுக்கு போக சொன்னது மட்டுமல்லாமல் வாகனத் தையும் கொண்டுபோகச் சொல்லிவிட்டார்.

சாய்மனைக் கதிரையில் சாய்ந்தாற்போல் உட்கார்ந்திருந் தாள் சாந்தி. மூச்சு இரைச்சலாக வந்தது. இடையிடை இரு மல் வேறு. இருமும் போது நெஞ்சைப் பொத்திப் பிடித்தாள். உடல் நெருப்பாகக் கொதித்தது.

''என்ன இது...? இவ்வளவு மோசமா இருக்கு. காலமை ஒண்டும் தெரியேல்லையே...''

''ரெண்டு மூண்டு நாளா பின்னேரங்களில கணகணப்பா இருந்ததெண்டு சொன்னவா அம்மா... திடீரெண்டு இப்ப பின்னேரம் தலைசுத்தி விழுந்திட்டா.... நல்ல காய்ச்சலும் அடிக்குது. மத்தியானமும் ஒண்டும் சாப்பிடேல்லை அப்பா வேண்டாம் எண்டிட்டா.

சுக்குமல்லித் தேநீரை பதமாக ஆத்தியபடி வெண்ணிலா சொன்னாள்.

''எனக்கு என்ன செய்யிறது எண்டு தெரியேல்லை... பக் கத்து வீட்டு ஆச்சிதான் ஈரத்துணியால நெத்தியை அடிக்கடி துடைச்சுவிடச் சொன்னவா... ஈரத்துணியை நெத்தியிலை போட்டபடி விட்டால் சளி கட்டீடுமாம்.... ஆனா..., என்ன செய்தும் அம்மாக்கு கொஞ்சமும் குறையேல்லை... பாவ மப்பா அம்மா...'' அவளின் முகத்தில் கவலை தொனித்தது.

ஆனந்தனுக்கும் கவலையாகத்தான் இருந்தது.

'எப்படிக் கஸ்டப்படுறாள் பாவம் இப்பெல்லாம் ஏன் இவளுக்கு அடிக்கடி வருத்தம் வருகுது? இன்னும் நல்லா இவளை நான் பாக்க வேணும். என்னை நம்பி வந்தவள். வாழ்க்கையில பட்டபாடு கொஞ்சமோ'

தன்னுடைய கவலையை முகத்தில் காட்டிக் கொள்ளாமல்

''நான் வந்திட்டன்தானே.... எல்லாம் நான் பாத்துக் கொள் ளுறன்... அம்மா இதைக் குடிச்சவுடனை, ஒருக்கா ஆஸ்பத்தி ரிக்கு போட்டு வருவம் வானிலதான் வந்தனான்.. கெதியில போயிடலாம்...''



ஆனந்தனின் வார்த்தைகளைக் கேட்டவுடன் இருவர் முகத்திலும் ஒருவித நிம்மதி தெரிந்தது.வாகனத்தில் இருக்கக்கூட முடியாமல் அவதிப்பட்ட சாந்தியை தோளில் சாய்த்து ஆசுவாசப்படுத்தினாள் வெண்ணிலா. மூச்சு விட சிரமப்பட்ட சாந்திக்கு ஆஸ்பத்திரியில் உடனேயே ஒட்சிசன் குழாயை பொருத்தி விட்டார்கள்.

''ஏன் இவ்வளவு நேரம் தாமதித்தனீங்கள்...?'' என்று கடிந்துகொண்டார் வைத்தியர்.

ஸ்கான், எக்ஸ்ரே என்று பலவித சோதனைகளுக்குப் பிறகு, இரண்டு நுரையீரல்களிலும் நீர் கோர்த்திருப்பதாக அறிவித்தார் வைத்தியர். அவர்கள் மிரண்டு போயிருப்பதைப் பார்த்து அவர்களுக்கு அது புரியவில்லை என்பதை தெரிந்து கொண்டவர்....

''நிமோனியா காய்ச்சல் வந்திருக்கு. அதுகும் டபிள் நிமோனியா. மருந்துகள் தட்டுப்பாடான நேரத்தில கொஞ்சம் சிரமந்தான் ...வெளியில இருங்கோ.... ட்ரீட்மென்ற் போகுது.... பாத்திட்டு சொல்லுறம்....'' என்றார். இப்போது கோபத்துக்கு பதில் அவர் வார்த்தைகளில் அனுதாபம் தொனித்தது.

**ICU** வின் வெளி விறாந்தையில் இருந்த வாங்கில் ஆனந்தனும் வெண்ணிலாவும் காத்துக்கொண்டு இருந்தனர். திறந்த வெளி விறாந்தை. ஊதல் காற்றில் நடுங்கியபடி தகப்பனுடன் ஒட்டிக்கொண்டாள் வெண்ணிலா. அவளின் முகத்தில் சோர்வும், களைப்பும், கவலையும் தெரிந்தது.

''நீயும் சாப்பிடேல்லையோ அம்மா..? பார் முகமெல்லாம் காஞ்சுபோய் கிடக்கு அம்மாவுக்கு ஒண்டுமில்லை. எல்லாம் சரியாகீடும் ஒண்டும் யோசிக்காதை''... மகளுக்கு ஆறுதல் வார்த்தைகள் சொன்னான் ஆனந்தன்.

''இலையப்பா அம்மாவும் வேண்டாமண்டிட்டா எனக்கும் பசிக்கேல்ல.. அம்மா விழுந்தவுடனை எனக்கு உயிரே போனாப்போலை இருந்துது... நீங்கள் வந்தாப் பிறகுதான் நிம்மதி...''

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது விறாந்தையில் ஒருவர் தாண்டித்தாண்டி நடந்து வருவது தெரிந்தது.

'வெங்கியைச் சந்திச்சதுக்குப் பிறகு ஆரைப் பார்த்தாலும் வெங்கி மாதிரித்தான் தெரியுது.' நினைத்துக்கொண்டான் ஆனந்தன். பார்த்தால் அது உண்மையிலேயே வெங்கிதான்.

''என்ன அம்மான் நீ இங்க இரிக்க...? என்ன ஆச்சு...? இது உன்னோடை செல்லப்பெண்தானே...? அடுக்கடுக்காக கேள்விகேட்டபடி அருகில் உட்கார்ந்தான். வெண்ணிலாவுக்கு அவனை அறிமுகம் செய்து வைத்தான் ஆனந்தன்.

''இங்க வோட்டில இரிக்கிற ஒருத்தருக்கு துணிமணியும் சாப்பாடும் தந்து விட்டாங்கள் நான் வேலை செய்யிற முதலாளின்ட சொந்தக்காரங்களாம்...''

சாந்தியின் நிலைமையைக் கேட்டபின் வெங்கியும் ஆறுதல் சொன்னான்.

அப்போது வைத்தியரும் மருத்துவத் தாதிகள் இருவரும் வந்தனர். ஆனந்தன் எழுந்து நின்றான்.

''உங்கடை மனைவி சில நாட்களுக்கு இங்கதான் தங்க வேணும். இன்னும் கொஞ்சம் எண்டால் நிலைமை மோசமாகி இருக்கும். நல்ல வேளையாக கூட்டி வந்தீங்கள். இப்ப ஒருத்தரும் உள்ளுக்கு போய் பார்க்க ஏலாது. வெளியாக்கள் உள்ளுக்கு போனால் நோயாளிக்கு கிருமித் தொற்று வந்திடும்.வெளியால நிண்டுதான் நீங்கள் பார்க்கலாம். இப்ப நீங்கள் போட்டு நாளைக்கு வாங்கோ.... உங்கடை நம்பர் எங்களட்டை இருக்கு.... பயப்பட வேண்டாம் நாங்கள் பார்த்துக்கொள்ளுறம். கொஞ்சம் சரிவர, நோமல் வோட்டுக்கு மாத்தீடுவம்....''

ஒட்சிசன் முகமூடியுடன், அசைவில்லாமல் கிடந்த சாந்தியை வெளியில் நின்றபடி பார்த்துவிட்டு வீட்டுக்கு புறப்பட்டார்கள் அவர்கள். வெண்ணிலாவின் கண்கள் கலங்கியிருந்தன. ஆனந்தனும் கலங்கித்தான் போய்விட்டான். வெங்கியும் அவர்களுடனே கூட வந்தான்.

''சைக்கிளை இடையில விட்டிட்டு பஸ்ஸுல வந்தனான்... கிட்டத்தில இருக்கிற பண்ணையிலதான் இரிக்கன்... நாளைக்கு காலைல நான் வீட்டடிக்கு வாரன்.... எல்லாருமா ஆஸ்பத்திரி போவம்....'' சந்தியருகில் இறங்கிக் கொண்டான் வெங்கி.

வெண்ணிலாவை சாப்பிடச் செய்வதற்காக என்று விருப்பமே இல்லாமல் இரண்டு கவளம் உணவை தானும் அருந்தியிருந்தான் ஆனந்தன். அடிக்கடி எழுந்து நீர் மொண்டு குடிப்பதும் புரண்டு புரண்டு படுப்பதுமாகஇரவுப் பொழுது நிம்மதியில்லாமல் கழிந்தது. விடிந்ததும் விடியாததுமாக வெளியில் சைக்கிள் சத்தம் கேட்டது. வெங்கியும் சற்று வயது குறைந்த பெண் ஒருத்தியும் வந்தார்கள்.

''மச்சான்... உனக்கு சேப்பிறைஸ் தரலாம் எண்டு பார்த்தன். அது முடியேல்லை இவதான் என்டை மனுசி காவேரி. இவ வெண்ணிலாவோட இங்க தங்குவா.. நீ வெளியில ஆஸ்பத்திரி, வேலை எண்டு ஓடித்திரியறப்ப பிள்ளை தனிய இரிப்பா எண்டு பயப்பட வேணாம். தங்கச்சி ஆஸ்பத்திரில இருந்து வரமட்டும் இவ பிள்ளையை பாத்துப்பா...''

நெகிழ்வாக இருந்தது ஆனந்தனுக்கு. இப்படி ஒரு ஆறுதல் கிடைக்கும் என்று ஆனந்தன் கனவிலும் நினைக்கவில்லை.

''நேரமாச்சு. காவேரி..நீ வீட்டில என்ன செய்யவேணும் எண்டு பாத்து செய். நாங்கள் ஆஸ்பத்திரிக்கு போட்டு வாறம்.''

சாந்தியின் நிலைமையில் மாற்றமில்லை என்று சொன்னார்கள். மருந்துகள் வேலைசெய்ய நேரமெடுக்கும் என்பதால் உடனடியாக மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது என்றார்கள். மருந்தின் மயக்கத்தில் துவண்டுபோய் படுத்திருந்தாள் சாந்தி. மூக்கில் பொருத்தப்பட்ட ஒட்சிசன் குழாய் இன்னும் இருந்தது.

ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்கு சாந்தி இங்கு தங்கி சிகிச்சை பெறுவது அவசியம் என்றுவிட்டார்கள். அவளை தூர இருந்தே பார்த்துவிட்டு வீட்டுக்கு புறப்பட்டார்கள் அவர்கள். ஆனந்தனின் இதயம் கனத்திருந்தது. இருக்கிறாளா இல்லையா என்று தெரியாமல் இருந்த காலத்தைக் கடந்து, அவன் குடும்பத்துடன் சேர்ந்த பிறகு, சாந்தியை அவன் இவ்வளவு நாட்கள் பிரிய நேர்ந்ததில்லை.

வீடு நல்ல நேர்த்தியாக இருந்தது. சமையலும் செய்து வைத்திருந்தாள் காவேரி.

''ஏன் அத்தை தனிய செய்தனீங்கள்? நான் வந்த பிறகு செய்



திருந்தால் நானும் உதவியிருப்பனே..''

காவேரியை வெண்ணிலா முன்பின் பார்த்ததில்லை. இருந்தும் வெண்ணிலா இப்படி ஒட்டிக்கொண்டது ஆனந்தனுக்கு ஆச்சரியமாக இருந்தது.அப்படியொன்றும் யாருடனும் சட்டென்று பேசக்கூட மாட்டாள் வெண்ணிலா.

'நண்பனின் மனைவி எனக்குத் தங்கைதானே. முறை சரிதான். சொந்தங்களை தொலைத்து நிற்கும் எங்களுக்கு புதிது புதிதாக உறவுகள் வருவது மகிழ்ச்சிதான்..' எண்ணிக்கொண்டான் ஆனந்தன்.

காவேரியின் வற்புறுத்தலில் எல்லோருமாக உணவருந்தினார்கள். இங்கேயே தங்குமாறு வற்புறுத்தியும் தான் வீட்டுக்குப் போக வேண்டும் என்றுவிட்டான் வெங்கி. அங்கு தனக்காக சிலர் காத்திருப்பார்கள் என்று பொடி வைத்துப் பேசினான். பிற்பகலுக்கு மேல் வருவதாக சொல்லி அவன் புறப்பட அவனுடன் ஆனந்தனும் புறப்பட்டான்.

கடைக்கு சாமானுகள் இறக்க வேணும் மச்சான். கவலைப் பட்டுக்கொண்டு வீட்டிலையே இருக்க ஏலாதல்லோ சாந்தி வருமட்டும் நான் வேலைக்குப் போகலாம். காவேரி வந்தது எவ்வளவு நிம்மதி தெரியுமோ மச்சான். வெண்ணிலாவைப் பற்றி பயப்பிடாமை வேலைக்குப் போகலாம். தாங்ஸ்டா.. நீ வரக்கிடையில நானும் வீட்டை வந்திடுவன்.

களஞ்சியத்தில், முந்தையநாள் அவனுடைய வேலையைச் செய்த யாரோ அதை ஒழுங்காகச் செய்யாமல் கடனே என்று செய்திருந்தார்கள். அதை முறையாக முடிக்கவும் இல்லை. ஆனந்தன் வேலைகளை நேர்த்தியாகவும் விரைவாகவும் செய்பவன். இப்போது அவனுக்கு இரட்டை வேலை. களஞ்சியத்தில் அலங்கோலமாக இருக்கும் இந்தக் குளறுபடிகளை சரிசெய்து, பிறகு இன்றைய வேலைகளை முடிக்க வேண்டும்.

இன்றைக்கு வேலை அதிகம்தான். மண்டிக்காரர்வசம் இப்போது அதிக பெட்டிக் கடைகள் இருப்பதால், இரண்டு மூன்று தடவைகளாக 'லோட்' ஏற்ற வேண்டியிருந்தது. அத்தனை பிரபல பாடசாலைகளிற்கும் அருகில் இருக்கும் பெட்டிக்கடைகள்மண்டிக்காரரின் பொறுப்பில்தான் இருந்தன. அந்தக் கடைகளில் எப்போதும் கூட்டம்தான். வியாபாரம் அள்ளும். பாடசாலை விடும் நேரம் இன்னும் ஆகவில்லை. ஆனாலும், ஒரு ஆண்கள் பாடசாலையின் வாசலில் கூட்டமாக இருந்தது.

கோபமாகவும் படபடப்பாகவும் பேசிக்கொண்டார்கள் கூட்டத்தில் இருந்தவர்கள். பெட்டிக்கடை வாசலில் நின்று பார்த்தபொழுது காவற்துறையினர் சிலர் பாடசாலையின் உள்ளே செல்வதும் தெரிந்தது. என்னவாக இருக்கும்? அவசர அவசரமாக பொருட்களை இறக்கிவிட்டு கூட்டத்தோடு கூட்டமாக தானும் நின்றுகொண்டான் ஆனந்தன்.

இந்தப் பாடசாலையில் படிக்கும் ஒரு பையன் பெண்கள் பாடசாலையில் படிக்கும் ஒரு பெண்ணை ஒருதலையாக காதலித்திருக்கிறானாம். அந்தப் பெண்ணின் வீடுவரைக்கும் போவதும், வீட்டுக்கு வெளியில் நடமாடுவதும், கடிதங்கள் கொடுப்பதும், பாடசாலைக்கு, ரியூசனுக்கு என்று வெளியில் எங்கும் போக முடியாமல் பின்தொடர்ந்து சித்திரவதை கொடுப்பதுமாக இருந்திருக்கிறான். அந்தப் பெண்ணின் வீட்டவர்கள் என்ன முயன்றும் அவனை எதுவும் செய்ய முடியவில்லையாம். அந்தப் பிள்ளை ஒத்துவரவில்லை என்றதும் கொன்றுவிடுவேன் என்று மிரட்டியிருக்கிறான்.

நேற்று கும்பலாக வந்து, பாடசாலை முடிந்துபோன பெண் பிள்ளைகளுடன் தரக்குறைவாக நடந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ஒருவித போதையில் இருந்ததாக பார்த்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனால் இது 'பொலிஸ் கேஸ்' ஆகியிருக்கிறது.

'அவன் ஒரு தறுதலை. இப்பிடி முதலும் பிள்ளையளோட சேட்டை விட்டிருக்கிறான். காதலும் இல்லை ஒண்டுமில்லை'

'பணம், பதவி இருந்தால் என்னவும் செய்வினமோ?'

'பள்ளிக்கூடம் இதைத் தட்டிக் கேட்காதோ?'

'நீங்கள் வேற! காவல்துறையே விசாரிக்க மாட்டன் எண்டிட்டுது. ஆக்கள் போதை அடிச்சுப்போட்டு ரோட்டில கூத்தாடினதை சனங்கள் பாத்ததும், அவ்வளவு பெம்பிளைப் பிள்ளையளின்ரை குடும்பமும் பொலிஸுக்குப் போனதும் தான் வேற வழியில்லாமை வந்திருக்கினம். இப்பவும் பாருங்கோ ஒரு மாதிரி கதையை அமுக்கீடுவாங்கள்'

'உந்தப் பெட்டிக்கடையளும் போதைவஸ்து விக்குது எண்டு அரசல்புரசலாக கதை. முதல்லை உந்தக் கடையளை அடிச்சு நொருக்க வேணும்..'

'பெரியவர் வாறார் என்னுகினம். அவர் வந்துதான் இப்பிடியான கழிசடையளுக்கு ஒரு முடிவு கட்ட வேணும்'

'உந்தக் கதை உண்மையோ..? நான் நம்பேல்லை. உதுகும் உந்த அழிவாரின்ரை கட்டுக்கதையாகத்தான் இருக்கும். இருந்து பாருங்கோ, அவரைத் தெரிஞ்சவை எவையும் உந்தக் கதையை ஆதரிக்க மாட்டினம்'

பலதும் பத்துமாக பல தகவல்கள் அங்கு பேசப்பட்டன. பெட்டிக்கடைப் பையன் திருட்டு முழியுடன் நின்றதும் ஞாபகத்துக்கு வந்தது. பெட்டிக்கடை பற்றிய சந்தேகம் ஆனந்தனுக்கும் உண்டு. அது சரி என்றால் அதற்கான வினியோகம் தனியாக வரவேண்டும். இப்போதெல்லாம் தான் கொண்டுவரும் பொருட்களை தானே களஞ்சியத்திலிருந்து சரிபார்த்துத்தான் அவன் எடுத்து வருகிறான். நினைக்கவே கூடாது என்று நினைத்தாலும் நாட்டு நடப்புகள் மனதை நொருக்குபவையாக இருக்கின்றன.

ஆனந்தன் வீட்டிற்கு வரும்போது வீடு கலகலப்பாக இருந்தது. வெங்கி வந்திருந்தான். அவனுடன் இரண்டு பையன்கள் இருந்தனர். இருவரும் வெண்ணிலாவை விட இளையவர்கள். அவர்களை தனது பிள்ளைகள் என்று அறிமுகப்படுத்தினான் வெங்கி. கல்யாணம் கட்டவே மாட்டேன் என்ற உறுதியுடன் இருந்த வெங்கி இப்போது மனைவி, குழந்தைகள் என்று இருப்பது உண்மையாகவே மகிழ்ச்சியான விடயம்தான்.

மாலை ஆனந்தனும் வெங்கியும் மட்டும் வைத்தியசாலைக்கு புறப்பட்டனர்.

''போட்டு வாங்க மாமா...! போட்டு வாங்க பெரியப்பா..!''

அவனின் பையன்கள் வழியனுப்பி வைத்தனர்.

'என்னது...? பெரியப்பாவா...?

**தொடரும்.....**











# கிழக்கில் தைப் பொங்கல் விழா




